REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 20 விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் : 33। ஐப்பசி ।। ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 27 ஒக்ரோபர் 2020 வள்ளுவர் ஆண்டு 205।

## மருதங்கேணியில் இனி இடமில்லை!

யாழ்ப்பாணம், ஒக். 27

கொரோனா நோயாளர்கள் தங்க வைக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்படும் மருதங்கேணி மருத்துவமனை அதன் கொள்ளளவான 50 பேரை நேற்று எட்டியுள்ளது. 18 ➤

# குருநகரில் கொரோனா!

### பேலியகொட சென்றுவந்த இருவருக்குத் தொற்று

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 27

யாழ்ப்பாணம் குருநகரிலுள்ள தனியார் கடலுணவு நிறுவனத்தில் பணியாற்றும் இரண்டு பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. 18 ➤

## துருக்கியில் இருந்து மூன்றாவது அலை?

கொழும்பு, ஒக்.27

கொரோனா வைரஸின் 3ஆம் அலை இலங்கையில் தாண்டவமாடிவரும் நிலையில் அதன் ஆரம்பப்புள்ளியை புலனாய் வுத்துறையினர் கண்டுபி 18 ➤

முச்சந்தி முரளி



"துருக்கியில இருந்து இப்ப குருநகர் மட்டும் வந்த பிறகும் சமூகத் தொற்றில்லையாம்.. இதை எங்க போய் சொல்லி அழுகிறது?"

## புதிய கொத்தணியாக குருநகர் உருவாகலாம்!

### சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 27

குருநகரில் கொரோனாத் தொற்றாளர்கள் இருவர் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில் அது இன்னொரு உபகொத்தணியாக மாற்றமடையலாம் என்று சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

குருநகரிலுள்ள தனியார் கடலுணவு வியாபார நிலையத்தில் கூலர் சாரதிகளாக உள்ள இருவருக்கே தொற்று உறுதிப்படுத்தப் பட்டது. பேலியகொட மீன் சந்தை கொத்த 18 ➤

## கட்டுப்படாத 'கொரோனா'

### நேற்றும் 541 பேருக்கு தொற்று

கொழும்பு, ஒக்.27

இலங்கையில் நேற்று 541 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப் 18 ➤

## கோத்தா சொல்லை தட்டிய அதிகாரிகள்

யாழ்ப்பாணம், ஒக் 27

திங்கட் கிழமைகளில் பொது மக்கள் தினம் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அரசால் அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலும், அந்தத் தினத்தில் பிரதேச செயலர்கள், திணைக்களத் 18 ➤

## சுகாதார நடைமுறையில் இன்னும் இறுக்கம் தேவை

### பொலிஸாருக்குப் பணிப்பு

யாழ்ப்பாணம், ஒக் 27

வடக்கு மாகாணத்தில் மக்கள் சமூக இடைவெளி மற்றும் முகக்கவசம் அணிவதை இறுக்கமாக கண்காணிக்குமாறு பாதுகாப்புத் தரப்பினரிடம் வடக்கு 18 ➤

## முல்லைத்தீவு, கோப்பாயில் தனிமைப்படுத்தப்பட்ட இருவருக்கு கொரோனா

யாழ்ப்பாணம், ஒக் 27

பேலியகொட மீன் சந்தையுடன் தொடர்புடையவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ள முல்லைத்தீவு மற்றும் கோப்பாய் 18 ➤

## குற்றங்களை குறைப்பதில் பொலிஸார் மந்தபோக்கு!

### வடக்கு ஆளுநர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக் 27

சட்டவிரோத மணல் அகழ்வு மற்றும் காடழிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் 18 ➤

## தப்பி ஓடியவருக்கும் கொரோனா

யாழ்ப்பாணம், ஒக். 27

பேலியகொட மீன் சந்தையில் பணிபுரியும் மன்னாரைச் சேர்ந்த நபர் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர் பேலியகொடவிலிருந்து மன் 18 ➤

## 20ஐ ஆதரிக்க ரூபா 600 மில்.

### பேரம் பேசிய எம்.பிக்கு கழிவறையில் ஏமாற்றம்

கொழும்பு, ஒக்.27

அரசமைபின் 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களிக்க 600 மில்லியன் ரூபா கேட்டு வாக்களித்த பின் ஏமாற்றம் அடைந்த எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் தொடர்பான தகவல் 18 ➤

## கரவெட்டி தவிசாளர் பதவி விலக முடிவு!

15 ➤

## துமிந்தவின் விடுதலைக்காக பாடுபடும் தமிழ் எம்.பிக்கள்!

### மனோ தரப்பும் கையொப்பம்

கொழும்பு, ஒக்.27

கொலைக் குற்றத்துக்காக தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு பொதுமன்னிப்பு வழங்கக் 15 ➤

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்

அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.68,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே

- அதிகபட்ச இரகசியத் தன்மை
- சிநேகபூர்வமான உடனடி சேவை
- சிறந்த பாதுகாப்பு

இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,

தங்கக் கடன் 011 200 88 88 செலான் வங்கி

Brand Finance Rating "A+" Fitch Rating: "A" (lka)

# கொழும்பிலிருந்து மன்னாருக்கு பஸ்களில் வந்தோர் தொடர்புகொள்ளவும்

மன்னார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் அவசர கோரிக்கை

தலைமன்னார், ஒக். 27

**கொழும்பு பேலியகொட மீன் சந்தைப் பகுதியிலிருந்து மன்னாருக்கு வந்திருந்த இருவருக்கு கொவிட் – 19 தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்கள் கொழும்பிலிருந்து தலைமன்னார் வரைக்கும் பயணித்துள்ளனர். அவர்களில் ஒருவர் மன்னாரிலுள்ள புதுக்குடியிருப்பு வரையும் இ.போ.ச. பஸ்ஸில் பயணித்துள்ளார். எனவே இத்தகைய பஸ்களில் பயணித்த சகலரும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அலைபேசி இலக்கங்களுடன் உடன் தொடர்பை ஏற்படுத்துங்கள் என்று மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் த.வினோதன் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

கொழும்பு பேலியகொட மீன் சந்தையில் வேலை செய்த ஒருவர் அங்கு கொரோனா பரிசோதனைக்கு உட்பட்டிருந்த நிலையில், அங்கிருந்து தப்பித்து கடந்த செவ்வாய்க்கிழமை இரவு 11.20 மணிக்கு கொழும்பிலிருந்து புறப்பட்ட 'ரத்னா' பஸ்ஸில் மன்னாருக்கு வந்துள்ளார். மறுநாள் புதன்கிழமை காலை 8.45 மணிக்கு மன்னாரிலிருந்து தலைமன்னாருக்குப் புறப்பட்ட இலங்கை போக்குவரத்துச் சேவையிலும் பயணித்துள்ளார். அவருக்கு கொரோனாத் தொற்று இருப்பதாக தெரிவிக்கப்பட்டதால், இராணுவத்தினரின் உதவியுடன் தேடுதல் நடத்தி மன்னார் புதுக்குடியிருப்பில்வைத்து நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவருக்கு மருத்துவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, பேலியகொடவில் வேலை செய்துவந்த மன்னாரைச் சேர்ந்த இன்னொருவர் கடந்த வெள்ளிக்கிழமை மன்னாருக்கு வந்து மூர் வீதியில் ஓர் இடத்தில் தங்கியிருந்துள்ளார். அவரும் கடந்த சனிக்கிழமை கண்டறியப்பட்டு மன்னார் மருத்துவமனையில் தங்கவைக்கப்பட்டிருந்தார். அவருக்கு நடத்திய பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்கும் கொவிட் 19 தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர் கடந்த வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு கொழும்பு கோட்டைப் பகுதியிலிருந்து மன்னாருக்குப் புறப்பட்ட 'எச்.எஸ். ரவல்ஸ்' என்ற தனியார் பஸ்ஸில் பிரயாணம் செய்துள்ளார்.

எனவே மேற்குறித்த பஸ்களில் பயணித்த சகல பிரயாணிகளும் உங்கள் மற்றும் குடும்பத்தார், பொதுமக்கள் நலன் கருதி உடனடியாகவே 071 8474361, 0776845712 ஆகிய அலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பு எடுத்து ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (த-60)

# தென்மராட்சியில் கொரோனா இல்லை

சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவிப்பு

சாவகச்சேரி, ஒக். 27

தென்மராட்சிப் பகுதியில் இதுவரை கொரோனாத் தொற்று ஏற்படவில்லை. வதந்திகளையும் முகநூல் பதிவுகளையும் நம்பவேண்டாம். ஏதாவது சந்தேகம் ஏற்பட்டால் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் அல்லது பொது சுகாதாரப் பரிசோதகரிடம் கேட்டு உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள் என்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார்.

தென்மராட்சியில் கொரோனாத் தொற்று இல்லை என்பதற்காக சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடிக்கத் தவறவேண்டாம் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

தென்மராட்சியில் கொரோனா நோயாளியொருவர் இனங்காணப்பட்டுள்ளார் என்று முகநூல்களில் பதிவிட்டுள்ளனர். அது தவறான தகவல். அந்தத் தகவலால் பிரதேச மக்களிடையே பரபரப்பு ஏற்பட்டது.

எனவே, முகநூல்களில் பதிவிடுவோர் சுகாதாரத் திணைக்களத்திடம் கேட்டு உறுதிப்படுத்திய பின்னர் பதிவிடுங்கள். தவறான தகவல்களை முகநூல்களில் பதிவிட்டு மக்களிடையே பதற்றநிலையை உருவாக்க முயற்சிப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கொரோனாத் தொற்று சமூகப் பரவலாக மாறிவருவதால் பிரதேச மக்கள் தேவையற்ற நடமாட்டங்களையும், பயணங்களையும் இயன்றளவு தவிர்த்து வீடுகளில் தங்கியிருங்கள். அவசியமெனக் கருதும் பட்சத்தில் முகக்கவசம் அணியுங்கள். தனியாள் இடைவெளிகளைகளைப் பின்பற்றுங்கள் என்றும் சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார். (த-9)

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின்

# மருத்துவ கிளினிக் சேவைக்குரிய கட்டடம் விக்டோரியா வீதியில் திறப்பு



யாழ்ப்பாணம், ஒக். 27

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பின்புறமாக விக்டோரியா வீதியிலுள்ள கட்டடத் தொகுதியில் நேற்று மருத்துவ கிளினிக் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்தக் கட்டடத் தொகுதியை சுபாஷ் ஹொட்டல் முன்னாள் உரிமையாளர் மறைந்த சங்கரனின் புதல்வர் ஹரிஹரன் தற்காலிகமாக வழங்கியிருக்கின்றார் என்று தெரிவிக்கப்பட்டது.

கட்டடத் தொகுதியை திறந்துவைக்கும் நிகழ்வில் கலாநிதி ஆறு.திருமுருகன் மற்றும் ஹரிஹரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

சில நாள்களில் மேலும் சில கிளினிக்குகள் இந்தக் கட்டடத் தொகுதியில் இயங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று மருத்துவமனைத் தரப்பினர் தெரிவித்தனர்.

1962 காலப்பகுதியில் தமிழக முன்னாள் முதலமைச்சர் மறைந்த எம்.ஜி. ராமச்சந்திரன் இந்தக் ஹொட்டலுக்கு பயணம் செய்திருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-20)

# திருவையாறில் மீண்டன வெடிபொருள்கள்



கிளிநொச்சி, ஒக். 27

கிளிநொச்சி திருவையாறு 2ஆம் பகுதியில் தனியார் காணி ஒன்றில் அடையாளம் காணப்பட்ட வெடிபொருள்கள் நீதிமன்றின் அனுமதியுடன் நேற்று மீட்கப்பட்டன.

அங்கு வெடிபொருள்கள் இருந்தமை நேற்றுமுன்தினம் தெரியவந்தது. கிளிநொச்சி பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டு அந்தப் பகுதியில் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது.

இந்தநிலையில் விஷேட அதிரடிப்படையினர் வெடிபொருள்களை மீட்டனர். அவை பயன்படுத்த முடியாதவை என்று தெரிவித்த பொலிஸார், அவற்றைச் செயலிழக்கச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தனர்.

குறித்த தனியார் காணியில் விடுதலைப் புலிகள் முகாம் அமைத்து தங்கியிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. கடந்த வருடம் குறித்த காணி விடுவிக்கப்பட்டிருந்தது. எனினும், இவ் வெடிபொருள்கள் எந்தத்தரப்புக்குச் சொந்தமானவை என்பது தொடர்பான தகவல்கள் வெளியாகவில்லை. (த6,214,ரி2)

# என்னைக் காரணம் காட்டி '20ஐ' புறம்தள்ளாதீர்கள்

பசில் கோரிக்கை

கொழும்பு, ஒக். 27

என்னை நாடாளுமன்றத்துக்குள் அழைத்துவரவே 20 பயன்படப்போகின்றது என்று தெரிவித்து அந்தத் திருத்தத்தை புறந்தள்ளக்கூடாது என்று பசில் ராஜபக்ச கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்போது இரட்டைக் குடியுரிமையை கொண்ட பசில் ராஜபக்ச தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றத்துக்கு கொண்டு வரப்படுவார் என்றும் தற்போது தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் அதற்காக இராஜினாமா செய்வார் என்றும் செய்திகள் வெளியாகியிருந்தன.

அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தில் சேர்க்கப்பட்ட இரட்டைக் குடியுரிமை கொண்ட ஒருவர் நாடாளுமன்றம் நுழைய முடியும் என்ற விதி கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

பசில் ராஜபக்ச நாடாளுமன்றத்திற்குள் நுழைய அனுமதிக்கவே 20ஆவது திருத்தம் தயாரிக்கப்பட்டது என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் குற்றச்சாட்டு ஒன்றினை முன்வைத்திருந்தார். இந்த நிலையிலேயே பசில் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ம-இ)

# வீடுகளிலேயே இனி தனிமைப்படுத்தல்!

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

**கொழும்பு, ஒக்.27**
**கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் இனிமேல் வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்படுவார்கள் என்று இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.**

இதுவரையில் கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள் தனிமைப்படுத்தல் நிலையங்களில் தனிமைப்படுத்தப்பட்டனர். தற்போது நாட்டில் கொரோனாத் தொற்றாளர்கள் அதிக எண்ணிக்கையில் இனங்காணப்பட்டு வரும் நிலைமையில் தனிமைப்படுத்தல் மையங்களில் நெருக்கடி நிலைமை தோன்றியுள்ளது.

இந்தநிலையில், இராணுவத் தளபதி நேற்று இந்த அறிவித்தலை விடுத்துள்ளார். இந்த நடைமுறை நேற்றுமுதல் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர், அவர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்கள் வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்படுவார்கள் என்று இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.(எ)

# வெட்டுப்புள்ளிகள் வெளியாகின

கொழும்பு, ஒக். 27
2019ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கான வெட்டுப்புள்ளிகள் தற்போது இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. இம்முறை 41 ஆயிரத்து 500 பேர் பல்கலைக் கழகங்களுக்கு இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க குறிப்பிட்டார்.
மருத்துவ பீடம், பொறியியல் பீடம் உள்ளிட்ட சில துறைகளுக்கு இம்முறை அதிக மாணவர்களை இணைத்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.
2019ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சை புதிய மற்றும் பழைய பாடத்திட்டங்களுக்கு அமைய நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-இ)

## துமிந்த விடுதலை மனுவில் கையெழுத்திட ஜீவன் மறுப்பு

கொழும்பு, ஒக்.27
தூக்குத் தண்டனைக் கைதியான மஹிந்த அணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு பொது மன்னிப்பு வழங்கக் கோரிய மனுவில் ஆளும் கட்சியின் பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலரும் கையெழுத்திட்டுள்ளனர்.
அதில், ஆளும் கட்சியைச் சேர்ந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலு குமார் ஆகியோர் கையெழுத்திட மறுத்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது. எனினும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி இராமேஸ்வரன் ஆதரவாகக் கையெழுத்திட்டுள்ளார்.
அத்துடன், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், பிரதித் தலைவர்களான பழனி திகாம்பரம், இராதாகிருஷ்ணன், அரவிந்குமார், உதயகுமார் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹாபீஸ் நஸீர் அஹமட் ஆகியோரும் ஆதரவாகக் கையெழுத்திட்டுள்ளனர் எனவும் அறியமுடிந்தது. (எ-22)

# பொம்பியோவின் வருகை எம்.சி.சிக்கானது இல்லை!

## கைச்சாத்திடமாட்டோம் என்கிறது இலங்கை அரசு

கொழும்பு, ஒக். 27
அமெரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் மைக் பொம்பியோவின் இலங்கைப் பயணம் ஒப்பந்தங்களை நோக்காகக் கொண்டது அல்ல. இந்தப் பயணத்தின்போது எவ்வித உடன்படிக்கைகளிலும் அரசு கைச்சாத்திடாது என்று அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.
பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
'சீனாவின் உயர்மட்ட தலைவர் ஒருவர் அண்மையில் இலங்கைக்கு வந்திருந்தார். அவரின் வருகைக்கு முன்னர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும், இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு மிடையில் காணொலி மாநாடு மூலம் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது. தற்போது அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் இங்கு வரவுள்ளார். நாடுகளுக்கிடையிலான உறவை வலுப்படுத்துவதற்காக இராஜதந்திர மட்டத்தில் இவ்வாறான வருகைகள், சந்திப்புகள் இடம்பெறுவது வழமையே. எனவே, ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவதை மையப்படுத்தி அமெரிக்க இராஜாங்கச் செயலரின் இலங்கை விஜயம் அமையவில்லை. இலங்கையானது நடுநிலையான வெளிநாட்டுக் கொள்கையை கடைபிடித்து வருகின்றது. அனைத்து நாடுகளுடனும் நட்புறவைப் பேணுவோம், ஆனாலும் எந்தவொரு நாட்டுக்கும் இலங்கையை பயன்படுத்திக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என எமது ஜனாதிபதி தெளிவாக அறிவித்துவிட்டார். அதேபோல் உள்விவகாரங்களில் தலையிடுவதற்கான வாய்ப்பையும் வழங்கமாட்டோம்.
அமெரிக்க இராஜாங்க செயலரின் இலங்கை பயணத்தின்போது எந்தவொரு உடன்படிக்கையிலும் கைச்சாத்திடுவதற்கு நாம் எதிர்பார்க்கவில்லை.
12 மணிநேரம் குறுகிய பயணத்தை மேற்கொண்டே இங்கு வருகிறார். ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோரை சந்தித்து பேச்சு நடத்துவார். - என்றார். (ம-44)

# யாழ். மாநகர எல்லைக்குட்பட்ட வியாபாரிகளுக்கு பி.சி.ஆர்.


யாழ்ப்பாணம், ஒக். 27
யாழ். மாநகர சபை எல்லைப் பகுதிக்குள் உள்ள அனைத்து மீன் சந்தைகளிலும் விற்பனையில் ஈடுபடும் வியாபாரிகள் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.
பேலியகொட மீன் சந்தையைத் தொடர்ந்து திருகோணமலை மீன் சந்தை மற்றும் சில பிரதேசங்களில் விற்பனையில் ஈடுபட்ட வியாபாரிகள் சிலரில் கொரோனாத் தொற்று இனங்காணப்பட்டதாலும் நுகர்வோர் இது தொடர்பில் தேவையற்ற அச்சம் கொள்வதைத் தடுக்கும் நோக்கிலும் இந்தப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. குருநகர், பாசையூர், சின்னக்கடை, நாவாந்துறை, கல்வியங்காடு உள்ளிட்ட அங்காடிகளில் இருந்து குறிப்பிட்டளவு எண்ணிக்கையானோருக்கு முதல் கட்டமாக பரிசோதனைகள் இடம்பெறவுள்ளன. மரக்கறி வியாபாரிகளிடத்திலும் இந்தப் பரிசோதனைகளை மேற்கொள்வது தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது. (ம-இ)

## விபத்தில் காயமடைந்த முதியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஒக்.27
விபத்தில் சிக்கிக் காயமடைந்த முதியவர் ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.
வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பொன்னையா கந்தையா (வயது80) என்ற முதியவரே உயிரிழந்துள்ளார்.
கடந்த 24ஆம் திகதி இவர் வட்டுக்கோட்டை, டச்சு சந்திக்கு அருகில் நடந்த விபத்தில் பாதிக்கப்பட்டார். வீதியில் நின்ற அவரை பின்புறமாக மோட்டார் சைக்கிள் மோதியதில் அவர் மயக்கமுற்றார். அவர் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டார். எனினும் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் இரவு அவர் உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (எ-26)

# வெடிபொருள்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக்.27
வசாவிளான் மத்திய கல்லூரியில் மதில் கட்டுவதற்காக மேற்கொள்ளப்பட்ட அகழ்வின்போது ஒரு தொகை வெடிபொருள்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.



மதில் கட்டுவதற்காக நேற்று அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
அதன்போது வெடிபொருள்கள் தென்பட்டுள்ளன.
இது தொடர்பாக உடனடியாகப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. 38 கிளைமோர்கள் மீட்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-26)

## திருத்தி வாசிக்கவும்

'கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரியில் தனிமைப்படுத்தப்பட்ட நபரால் உரும்பிராய் பகுதியில் அமைந்துள்ள மதுவிற்பனை நிலையத்துக்கு பூட்டு' என்று உதயனின் நேற்றைய பதிப்பில் வெளியான செய்தியில், அந்தப் பகுதியில் உள்ள கள் விற்பனை நிலையத்துக்கும் பூட்டு என்றவாறாகத் தவறுதலாகப் பிரசுரமாகியுள்ளது. மது விற்பனை நிலையமே சுகாதார காரணங்களுக்காகப் பூட்டப்பட்டது. கள் விற்பனை நிலையம் பூட்டப்படவில்லை. திருத்தி வாசிக்கவும். (ம)

# சமூகத் தொற்றின் விளிம்பில் நாடு; முதியவர்களுக்கு ஆபத்து அதிகம்

## எச்சரிக்கிறது அரச வைத்திய அதிகாரிகள் சங்கம்



**கொழும்பு, ஒக்.27**

**நாட்டில் ஒரு கடுமையான நிலைமை உருவாகியுள்ளது என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பிரதம செயலாளர், வைத்தியர் ஹரித அளுத்கே தெரிவித்துள்ளார்.**

சமூகத் தொற்று ஏற்படும் விளிம்பில் இலங்கை உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் சுகாதார சேவைகளின் பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஹேமந்த ஹேரத் தெரிவிக்கையில், மினுவாங்கொட கொத்தணி 6 அல்லது 8 வாரங்கள் தொடர்ந்து இருக்க வாய்ப்பு உள்ளது. ஒரு வயதான நோயாளி அல்லது ஒரு நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகினால் அவரின் நிலைமை தீவிரமாக இருக்கும். இதேவேளை இந்த கொத்தணியில் இருந்து வைரஸ் பரவுவது எந்த நேரத்திலும் வேகமாக அதிகரிக்க வாய்ப்புள்ளது என எச்சரித்துள்ளார். (வ-இ)

## கற்பிட்டி நபருக்கு கொரோனா இல்லை

புத்தளம், ஒக்.27


கற்பிட்டியில் பி.சி.ஆர் பரிசோதனையின்போது மரணமடைந்தவர் கொரோனாத் தொற்றால் இறக்கவில்லை என புத்தளம் மற்றும் கற்பிட்டி பிரதேசத்துக்கான திடீர் மரண விசாரணை அதிகாரி பீ.எம்.ஹிசாம் தெரிவித்துள்ளார்.

கற்பிட்டியில் 24ஆம் திகதி பி.சி.ஆர் பரிசோதனையின் போது 32 வயது நபர் உயிரிழந்தார். இந்த மரணம் கொரோனாவால் ஏற்பட்ட மரணம் என பரப்பப்பட்ட வதந்திகள் மக்கள் மத்தியில் அச்சத்தை தோற்றுவித்துள்ளன.

இவ்வாறான நடவடிக்கைகளில் எவரும் ஈடுபட வேண்டாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

## மட்டக்களப்பில் மேலும் 16 பேருக்கு கொரோனா

மட்டக்களப்பு, ஒக்.27



மட்டக்களப்பு ஓட்டமாவடி பிரதேசத்தில் மேலும் 16 பேருக்கு கொரோனாத் தொற்று நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்தியர் ஏ.லதாகரன் தெரிவித்தார். கொரோனாத் தொற்று தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பேலியகொட மீன்சந்தையில் ஏற்பட்ட கொரோனாத் தொற்றையடுத்து பல இடங்களில் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதற்கமைய மட்டக்களப்பு ஓட்டமாவடி பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 11 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர். இதையடுத்து அங்கு ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

இந் நிலையில் பேலியகொட மீன்சந்தையுடன் தொடர்புபட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு அதில் 60 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி ஆர் பரிசோதனையில் மேலும் 16 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதையடுத்து கிழக்கில் கொரோனாத் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை 43ஆக அதிகரித்துள்ளது எனத் தெரிவித்தார். (வ-இ)

## சிலாபம் சந்தைக்கு பூட்டு

சிலாபம், ஒக்.27

சிலாபம் நகரிலுள்ள மீன் மற்றும் காய்கறி சந்தையை இன்று தொடக்கம் ஒரு வார்த்துக்கு மூடுவதற்கு, தீர்மானிக்கப் பட்டுள்ளது.

சிலாபம் நகர சபையில் நேற்று நடைபெற்ற விசேட கூட்டத்திலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பேலியகொட மீன் சந்தை கொரோனாக் கொத்தணியுடன் தொடர்புடைய தொற்றாளர்கள் நால்வர் சிலாபத்தில் அடையாளம் காணப்பட்டனர்.

இதையடுத்து சுகாதாரப் பிரிவினர் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய பொதுச் சந்தையை ஒரு வாரத்துக்கு மூட, சிலாபம் நகர சபையின் தவிசாளர் துஷான் அபேசேகர நடவடிக்கை எடுத்துள்ளார். (வ-இ)






# டிப்பர்- பஸ் விபத்து: பயணி காயம்

வவுனியா, ஒக்.27

டிப்பருடன் பஸ் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் ஒருவர் காயமடைந்துள்ளார். இந்த விபத்து வவுனியா ஏ-9 வீதியிலுள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு முன்பாக நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது: டிப்பரொன்று ஓமந்தை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிள் ஒன்று திடீரென நகரசபை வீதியிலிருந்து ஏ-9 வீதிக்கு ஏற முற்பட்டுள்ளது. அந்தச் சமயத்தில் டிப்பர் சாரதி சடுதியாக வாகனத்தை நிறுத்தியுள்ளார்.

இதனால் டிப்பரை பின் தொடர்ந்து வந்த போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் டிப்பருடன் மோதியுள்ளது. சம்பவத்தில் பயணியொருவர் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

பஸ்ஸின் முன்பக்கம் பகுதியளவில் சேதமடைந்துள்ளது. வவுனியா போக்குவரத்து பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (வ-18)

## காலியில் இதுவரை 43 தொற்றாளர்கள்

காலி, ஒக்.27

காலி மாவட்டத்தில் இதுவரை 43 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது என காலி மாவட்ட தொற்று நோயியல் விசேட நிபுணர் வைத்தியர் வெனுர கே. சிங்காரச்சி தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, பலப்பிட்டிய சுகாதார வைத்திய பிரிவுக்குள் இதுவரை 32 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களுள் 11 பேர் பேலியகொட மீன் சந்தைத் தொற்றாளர்களுடன் தொடர்பிலிருந்தவர்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (வ-இ)

## அம்பாந்தோட்டை துறைமுகத்தில் இருவருக்கு கொரோனாத் தொற்று

அம்பாந்தோட்டை, ஒக்.27

அம்பாந்தோட்டை மீன்பிடித் துறைமுகத்தில் பணிபுரிந்த இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. அங்கு கடந்த 23 ஆம் திகதி 57 மீனவர்கள் உட்பட 60 பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. குறித்த பி.சி.ஆர்.பரிசோதனை முடிவுகள், நேற்றுமுன்தினம் வெளியாகியுள்ள நிலையில் இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.

இவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்களில் ஒருவர், கடந்த 21ஆம் திகதி, பேலியகொட மீன் சந்தைக்குச் சென்றமையால் சுய தனிமைப்படுத்தலில் இருந்துள்ளார். ஆனால் மற்றொருவர், பி.சி.ஆர்.பரிசோதனையின் முடிவுகள் கிடைக்கும் வரை சமூகத்தில் உலாவியமை கண்டறியப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (வ-இ)

## கொட்டகலவில் மூவருக்கு தொற்று

நுவரெலியா, ஒக்.27

கொட்டகல பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கொட்டகல சின்ன டிரேட்டன், வூட்டன் ஹில்ஸ், தலவாக்கலை தெவிசிறிபுர ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே தொற்றுக்குள்ளாகி உள்ளனர்.

மூவரும் பேலியகொட மீன் சந்தையில் தொழில் புரிந்து வீடு திரும்பிய நிலையில் அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதியாகியுள்ளது. அதையடுத்து மூவரின் குடும்பத்தினரும் தனிமைப்படுத்தப் பட்டுள்ளனர்.

தொற்றுக்குள்ளான மூவரும் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இதையடுத்து கொட்டகலை நகரிலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கண்கெட்ட பின்னர்...

இலங்கையில் கொரோனாவின் மூன்றாவது அலை எதிர்பார்த்ததை விட பல மடங்கு வேகமாக இருக்கின்றது. நாட்டின் பல இடங்களிலும் நாள்தோறும் தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டாலும், இன்னமும் சமூகப் பரவல் இல்லை என்றே அரச தரப்புக்கள் சாதிக்கின்றன.

அரச தரப்பினர் சமூகத் தொற்று இல்லை என்று சத்தியம் செய்தாலும், தற்போது நாட்டில் காணப்படுவது சமூகத் தொற்றுப் பரவலே என்றும் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

நாட்டை முடக்கி நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும் என்று பல தரப்புகளிடம் இருந்து கோரிக்கைகள் வந்துள்ளபோதும், அவை எவற்றையும் அரசு காதில் வாங்கிக்கொள்வதாக இல்லை. கொரோனா மூன்றாவது அலை எங்கிருந்து கிளம்பியது என்பது தெரியாமல், தொற்றுக் கண்டறியும் இடங்களை மட்டும் முடக்குவதால் பெரிதாகப் பலன் கிட்டப்போவதில்லை.

கொரோனாத் தொற்றுக்கு முன்பாக வீர, பிரதாபங்கள் பேசிப் பயனில்லை என்பதற்கு கண் முன்பாக உள்ள சாட்சி அமெரிக்கா. தொற்று இனங்காணப்பட்ட ஆரம்பத்தில் அமெரிக்கா அதைக் கட்டுப்படுத்தத் தவறியது. அது அந்த நாட்டையே புரட்டிப்போட்டது, லட்சக்கணக்கானோரின் உயிரிழப்புக்கு காரணமானது.

நாடு முடக்கப்படாத நிலையில் நாள்தோறும் தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்படும் இந்த ஆபத்தான சூழ்நிலையில் மக்களே தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியுள்ளது. கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக அறிவிக்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளை ஒவ்வொருவரும் கடைப்பிடித்தால் மட்டுமே இந்த ஆபத்தில் இருந்து தப்பித்துக்கொள்ள முடியும்.

தெற்கில் பரவலடைந்து வந்த கொரோனாத் தொற்று இப்போது மெல்ல, மெல்ல வடக்கிலும் காலூன்றத் தொடங்கிவிட்டது. கொழும்பில் உள்ள கொரோனா கொத்தணிகளுடன் தொடர்புடையவர்கள் வடக்கில் தொற்றுடன் கண்டுபிடிக்கப்படுகின்றனர். எங்கோ தொலைவில்தானே தொற்று ஏற்பட்டுள்ளது என்று அலட்சியப்படுத்திவிட முடியாது என்பதை மக்கள் புரிந்து செயற்பட வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் மக்கள் சுகாதார நடைமுறைகள் பற்றி அலட்சியப்போக்குடன் நடந்துகொள்கிறார்கள் என்றே தோன்றுகின்றது. அதன்பின்னால் உள்ள பெரும் ஆபத்தை அவர்கள் புரிந்துகொள்வதாக இல்லை. மக்கள் சுயமாகச் சிந்தித்து சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். இது ஒருபுறம் இருக்க, நிகழ்வுகள், மக்கள் கூட்டமாகக் கூடும் இடங்கள் போன்ற விடயங்களில் துறைசார் அதிகாரிகள் இன்னமும் இறுக்கமான கட்டுப்பாடுகளை ஏற்படுத்த வேண்டிய தேவை உள்ளது.

எங்கள் பாதுகாப்பு எங்களிடம்தான் என்பதைப் புரிந்து செயற்படுங்கள். கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் செய்து எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை.

# சுகாதார அறிவுறுத்தலை சரியாகப் பின்பற்றுங்கள்

### யாழ். மாவட்டச் செயலர் ஆலோசனை

யாழ்ப்பாணம்,ஒக்.27

**இயல்பு நிலைமை பாதிக்காதவாறு, சுகாதார வர்த்தமானி அறிவுறுத்தலை அனைவரும் பின்பற்ற வேண்டும் என்று யாழ் மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்.**



வட மாகாண கொரோனா ஒழிப்புச் செயலணிக் கூட்டம் தொடர்பாக ஊடகங்களுக்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
கூட்டத்தில் பொதுவாக மாவட்டங்களுடைய நிலைமைகள் ஆராயப்பட்டன. சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள கொவிட்-19 தொடர்பான சட்ட ரீதியான ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் ஆராயப்பட்டது.
போக்குவரத்து நிலைமைகள் மற்றும் ஏனைய இயல்பு நிலைமைகள் பாதிக்காத வண்ணம், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி சகலரும் நடந்துகொள்ள வேண்டும் என்பது ஒரு தீர்மானமாக எடுக்கப்பட்டது.
அரச அலுவலகங்களில் கடமையாற்றுபவர்களுடைய விவரங்களைத் தொகுத்து வைத்திருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. எந்தப் பிரதேசத்திலாவது தொற்று ஏற்படும்போது, அவர்களை இலகுவாக தனிமைப்படுத்துவதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
அத்துடன் வெளி மாவட்டத்திலிருந்து இங்கு கடமையாற்றுவோர் தொடர்பில், பிரதேச செயலாளர் ஊடாக பதியும் வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம் - என்றார். (க-111)

## மட்டக்குளிக்கு விசேட பாதுகாப்பு

கொழும்பு,ஒக்.27
மட்டக்குளி சமித்புரப் பகுதியில், விசேட பாதுகாப்புப் பிரிவினர் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.
இராணுவத் தளபதியின் உத்தரவின் பேரில், விசேட பாதுகாப்புப் பிரிவினர் அங்கு அனுப்பப்பட்டுள்ளனர்.
இராணுவத்தினரையும், பொலிஸாரையும் உள்ளடக்கிய விசேட பிரிவினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று கொவிட் -19 தொடர்பான செயலணி தெரிவித்துள்ளது.
அத்துடன் கொட்டாஞ்சேனை, கொட்டாஞ்சேனை கிழக்கு, புளூமெண்டால் லங்காபுரப் பகுதிகளிலும் விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (க-இ)

## டெங்குத் தொற்று: பெண் உயிரிழப்பு

மட்டக்களப்பு,ஒக்.27
ஓட்டமாவடி சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகப் பிரிவில் டெங்குத் தொற்றால் பெண்ணொருவர் நேற்று உயிரிழந்தார் என்று ஓட்டமாவடி சுகாதார மருத்துவ அதிகாரி எம்.எச்.எம்.தாரிக் தெரிவித்தார்.
ஓட்டமாவடி ஜும்ஆ பள்ளிவாசல் வீதியைச் சேர்ந்த 43 வயதுடைய, மூன்று பிள்ளைகளின் தாயொருவரே உயிரிழந்துள்ளார்.
ஓட்டமாவடி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில், இந்த வருடம் ஜனவரி மாதம் முதல், ஒக்ரோபர் மாதம் வரை 211 பேர் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-150)





## மன்னார் மருத்துவமனைக்கு முகக்கவசங்கள் கையளிப்பு

மன்னார்,ஒக்.27
மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தால், மன்னார் மாவட்டப் பொது மருத்துவமனைக்கு, ஒரு தொகுதி முகக்கவசங்களும், கிருமித்தொற்று நீக்கி திரவங்களும் நேற்றுத் திங்கட்கிழமை கையளிக்கப்பட்டன.
மன்னார் மாவட்டத்தில் தற்போது கொரோனாத் தொற்று அச்சம் அதிகரித்துள்ளது. மருத்துவமனையில் பணியாற்றுகின்ற அதிகாரிகளின் பாதுகாப்புக்காக இவை வழங்கப்பட்டன.
மன்னார் சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் தலைவர் ஜாட்சன் பிகிராடோ தலைமையிலான குழுவினர் நேரடியாகச் சென்று அவற்றைக் கையளித்தனர். (க-56)

## இராணுவத்தினரால் நலத் திட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.27
இராணுவத்தினரால் யாழ்.மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கென, வீடமைப்புத் திட்டத்துடன் பல்வேறு நலத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
இராணுவத்தினரின் சரீர உழைப்புடன், நன்கொடையாளர்களின் உதவியாலும் இதுவரை 736 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன.
பாடசாலை மாணவர்களுக்கான ஆயிரத்து 75 துவிச்சக்கரவண்டிகள், பாடசாலை மாணவர்கள் 974 பேருக்கு புலமைப் பரிசில்கள், 7 ஆயிரத்து 92 பேருக்கு பாடசாலை உபகரணப் பொருள்கள், 103 குடும்பங்களுக்கு மலசலகூடங்கள், 77 சக்கர நாற்காலிகள் மற்றும் 85 செயற்கை கால்கள், முதியோர்களுக்கான 2 ஆயிரத்து 779 மூக்குக் கண்ணாடிகள், குறைந்த வருமானம் பெறும் 6,025 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் உள்ளிட்ட நலத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-159)

# சூதாட்டக் குற்றச்சாட்டு; ஏற்பாட்டாளர் கைது



கொழும்பு, ஒக்.27
சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது பொலிஸார் மேற்கொண்ட திடீர் முற்றுகையை அடுத்து தப்பிச் சென்றார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட சூதாட்ட நிலையம் ஒன்றின் ஏற்பாட்டாளர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பள்ளம பொலிஸார் தெரிவித்தனர்.

பள்ளம களுகெலே பிரதேசத்தில் கடந்த 10ஆம் திகதி சூதாட்டம் இடம்பெற்றது. பணத்தை இழந்த சந்தேக நபர், தனது மோட்டார் சைக்கிளையும் அடைவு வைத்து அந்தப் பணத்தையும் இழந்துள்ளார். பின்னர் தனது 13 வயது மகன் மூலமாகத் தனது மனைவியின் சகோதரியின் தங்க மாலையைத் திருடி ஈடுவைத்து அப்பணத்தைக்கொண்டு சூதாடிக் கொண்டிருந்தபோதே அந்த இடம் பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டுள்ளது. இதன்போது சந்தேக நபர் அங்கிருந்து தப்பிச் சென்றிருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பணத்துக்காக சூதாட்டத்தில் ஈடுபட்டமை, பொலிஸாரின் உத்தரவை மீறித்தப்பிச்சென்றமை, சிறுவனான மகனைப் பயன்படுத்தி திருட்டில் ஈடுபட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பள்ளம பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ப-இ)

# மனச்சாட்சியின் படியே '20'க்கு ஆதரவளித்தோம்

## மு.கா. பிரதித் தலைவர் கூறுகிறார்

கொழும்பு, ஒக்.27

**20ஆவது திருத்தம் தொடர்பில் மனச்சாட்டிப்படி வாக்களிக்குமாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் கூறியதாலேயே நாங்கள் ஆதரவாக வாக்களித்தோம், நாங்கள் கட்சியின் கட்டுக்கோப்பை மீறவில்லை. இவ்வாறு அக்கட்சியின் பிரதித் தலைவரும் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது;
20ஆவது திருத்தச் சட்டத்தில் முஸ்லிம் சமூகத்திற்குப் பாதகமான எந்தவொரு அம்சமும் இல்லை. ஏற்கனவே இல்லாத அதிகாரங்களை ஜனாதிபதிக்கு வழங்கவுமில்லை. 1978ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தன அறிமுகப்படுத்திய அரசமைப்பில் ஜனாதிபதிக்கு இருந்த அதிகாரத்தையும் விடக் குறைந்த அதிகாரங்கள்தான் 20ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் ஜனாதிபதிக்கு கிடைக்கின்றன.

அதேவேளை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை அமுலில் இருக்க வேண்டும் என்பது எமது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கொள்கையாகும். அதில் மறைந்த தலைவர் அஷ்ரப் உறுதியாக இருந்திருக்கிறார். தற்போதைய தலைவரும் இது விடயத்தில் உறுதியாகவே இருக்கிறார். கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில் ஜனாதிபதி முறையை முற்றாக ஒழிப்பதற்கு முயற்சிக்கப்பட்டபோது அவர் கடுமையாக எதிர்த்திருந்தார். ஆக ஜனாதிபதிக்கு கிடைக்க வேண்டிய அதிகாரங்கள் இச்சட்டத்தின் மூலம் கிடைப்பதில் முஸ்லிம் சமூகத்திற்கு எவ்வித பாதகமும் இல்லாத நிலையில் நாங்கள் ஏன் அதனை எதிர்த்து வாக்களிக்க வேண்டும். இந்நிலையில் எம்மிடம் அரச உயர் மட்டத்தினரால் ஆதரவு கோரப்பட்டபோது எமது பிராந்திய அரசியல் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு நாங்கள் வாக்களிப்பு தினத்தன்று நாடாளுமன்றத்தில் வைத்து எமது நாடாளுமன்றக் குழுவைக் கூடி தலைவருடன் பேசினோம். அவர் மனச்சாட்சிப்படி வாக்களிப்பதற்கு எமக்கு அனுமதி தந்தார். அதன்படியே நாங்கள் ஆதரவாக வாக்களித்தோம் என்பதை நான் மிகவும் பொறுப்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன். நாங்கள் கட்சிக் கட்டுக்கோப்பை மீறியே வாக்களித்தோம் என்றால் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து தயாணி கமகேயையும் மலையக மக்கள் முன்னணியில் இருந்து அரவிந்த குமாரையும் நீக்கியிருப்பது போன்று எமது முஸ்லிம் காங்கிரஸ் யாப்பின்படி ஏன் எம்மை கட்சியில் இருந்து விலக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்று நான் கேட்க விரும்புகின்றேன். எனவே இதில் இருந்து உண்மையான விடயம் என்ன என்பதை எல்லோரும் புரிந்துகொள்ள முடியும் -என்றார். (ப)

# கல்கிசை நீதிமன்றில் வழக்குகள் ஒத்திவைப்பு

கல்கிசை நீதிவான் நீதிமன்றத்துக்குள் கொரோனாத் தொற்றாளர் ஒருவர் வந்தமை தொடர்பான பரிசோதனை நடவடிக்கைகள் நிறைவடையும் வரை, சட்டத்தரணிகள் நீதிமன்றத்துக்கு வருகை தராமல் இருக்கவும், நீதிமன்றில் நேற்று, எடுத்துக் கொள்ளவிருந்த வழக்குகளை ஒத்தி வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. (ப)

# ரயிலிலும் மணல் ஏற்ற நடவடிக்கை

கொழும்பு, ஒக்.27
அடுத்த மாதம் தொடக்கம் ரயில் மூலமாக மணல் கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

ரயில் ஒன்றில் சுமார் 20 கொள்கலன் எடையுள்ள மணல் கொண்டு செல்ல முடியும் எனக் கூறப்படுகிறது. (ப)

# துமிந்தவை விடுவிக்க நாம் கோரவேயில்லை

## ஆளும் எம்.பிக்கள் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.27
மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவை விடுதலை செய்யுமாறு தாம் கோரிக்கை விடுக்கவில்லை என ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.


மனு ஒன்றின் மூலம் துமிந்தவை விடுதலை செய்யுமாறு ஜனாதிபதியிடம் கோரப்பட்டுள்ளது என ஊடகங்களில் தகவல் வெளியிடப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், தாங்கள் இவ்வாறான ஒரு மனுவில் கையொப்பமிடவில்லை என ஆளும் கட்சியின் கெஹலிய ரம்புக்வெல்ல, மஹிந்த அமரவீர, விதுர விக்ரமநாயக்க, விமல் வீரவன்ச மற்றும் சுரேன் ராகவன் ஆகிய எம்.பிக்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திர படுகொலைச் சம்பவம் தொடர்பில் துமிந்த சில்வாவுக்கு கடந்த 2016 ஆம் ஆண்டு மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. (ப-இ)

# நீதிமன்றங்களில் வழக்குகள் ஒத்திவைப்பு

சாவகச்சேரி, ஒக். 27
கொரோனாத் தொற்று ஏற்பட்ட சாவகச்சேரி பொறியியலாளரின் மனைவியான சட்டத்தரணி நீதிமன்றங்களுக்கு சமுகமளித்ததால், சாவகச்சேரி மற்றும் யாழ்ப்பாணம் நீதிமன்றங்களில் நேற்று நடைபெறவிருந்த வழக்குகள் பிறிதொரு தினங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெறவிருந்த வழக்குகள் அடுத்த வருடம் மார்ச் எட்டாம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி நீதிமன்ற வளாகம் நேற்று சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர் மற்றும் சாவகச்சேரி நகரசபையினால் தொற்றுநீக்கம் செய்யப்பட்டது.



சாவகச்சேரியைச் சேர்ந்த பொறியியலாளர் வவுனியா நெடுங்கேணியில், கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியிருந்தார். அவருடைய மனைவிக்கும் தொற்று இருக்கலாம் என்ற சந்தேகத்தில், அவருக்கு பி.சி.ஆர். சோதனை முன்னெடுக்கப்பட்டது. எனினும் முதல்கட்ட சோதனையில் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டது. (ப-9)

# முகக்கவசம் அணியாது வீதியில் பயணிக்கத் தடை

## வவுனியா பொலிஸார் நடவடிக்கை

வவுனியா, ஒக்.27
கொவிட்-19 இன் இரண்டாவது அலையானது வேகமாகப் பரவி வரும் நிலையில் அதனைக் கட்டுப்படுத்தும் முகமாக முகக்கவசம் அணியாது பயணிப்பவர்களைத் தடுத்து நிறுத்தி கடும் எச்சரிக்கையின் பின் வவுனியா பொலிஸார் விடுவித்து வருகின்றனர்.


இலங்கையில் அனைவரும் கட்டாயம் முகக்கவசம் அணியுமாறு அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருந்த போதிலும் பெரும்பாலான மக்கள் அரசாங்கத்தின் உத்தரவைப் பொருட்படுத்தாது முகக்கவசம் அணியாது பயணிக்கின்றனர். இதனையடுத்து வவுனியா மாவட்ட கொரோனாத் தடுப்பு பொலிஸ் பிரிவுப் பொறுப்பதிகாரி ஆர்.பி.குருசிங்கவின் தலைமையிலான பொலிஸார் நேற்று வவுனியா பழைய பேருந்து நிலையம் மற்றும் வவுனியா நகரப்பகுதிகளில் முகக்கவசம் அணியாது செல்பவர்களைத் தடுத்து நிறுத்தி அவர்களைப் பதிவு செய்து கடும் எச்சரிக்கையின் பின் விடுவித்தனர்.

இவ்வாறு முகக்கவசம் அணியாது செல்பவர்களை எச்சரிப்பது மாத்திரம் அல்லாது அவர்களது வாகனத்தை அவ்விடத்திலேயே நிறுத்திவிட்டு முகக்கவசத்தை வாங்கி அணிந்துவிட்டு வாகனத்தை எடுத்துச்செல்லுமாறும் பொலிஸார் பணித்தனர். (ப-18)





முல்லைத்தீவு செம்மலை மகா வித்தியாலயத்தில் நவராத்திரி விழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. (ஐ-222)



கொடிகாமம் கச்சாய் வடக்கு ஒட்டங்கேணி சன சமூக நிலையத்தின் நவராத்திரி விழா நேற்றுமுன் தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. (ஐ-159)



மன்னார் பேசாலை தாயிலான் குடியிருப்பு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் நவராத்திரி விழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. நவராத்திரி திருவிழாவின் மானம் பு மற்றும் வாழை வெட்டுத் திருவிழா என்பன சிறப்பாக நடைபெற்றன. (ஐ-213)

# பறவைகளின் சரணாலயமா சாவகச்சேரி திடீர் விபத்துப் பிரிவு?

கொடிகாமம்,ஒக் .27

**சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் புதிதாக அமைக்கப்பட்ட திடீர் விபத்து மற்றும் அவசர சிகிச்சைக் கட்டடம் மக்கள் பயன்பாட்டுக்கு வழங்கப்படாத நிலையில் அது, பறவைகளின் சரணாலயமாக மாறிவரும் அவல நிலை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

வடக்கு மாகாண சபையின் பெருந்தொகை நிதிச் செலவில் இரண்டு மாடிகள் கொண்டதாக குறித்த கட்டம் அமைக்கப்பட்டது. மக்கள் பயன்பாட்டுக்கென மக்களின் தேவைகளைக் கருத்திற் கொண்டு அமைக்கப்பட்ட குறித்த கட்டம் கம்பீரமாகக் காட்சி அளித்தாலும், அது முழுமைப்படுத்தப் பட்டு திறந்து வைக்காததால், இரவில் பறவைகளுக்கு அடைக்கலம் கொடுக்கும் சரணாலயமாக மாறி வருகிறது. இந்தக் கட்டடத்தில்



பொருத்தப்பட்டுள்ள ஜன்னல், கதவுகள் கழன்று விழும் துர்ப்பாக்கிய நிலையும் ஏற்பட்டுள்ளது. ஆகவே இந்த மருத்துவமனையில் அமைந்துள்ள கட்டடத்தை மக்கள் பயன்பாட்டுக்கு விடுவதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் உரிய முறையில் நிறைவேற்ற வேண்டும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ-159)

## தையலகம் திறப்பு

முல்லைத்தீவு, ஒக்.27

முல்லைத்தீவு அபிவிருத்தி அமைப்பின் ஏற்பாட்டில் கரைச்சி பகுதியில் "முல்லை மலர் தையலகம்" நேற்று திறக்கப்பட்டது.

நிகழ்வில் கரைதுறைப்பற்று உதவி பிரதேச செயலர் செல்வி. அ.சர்மிகா, தையலகத்தின் பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்தார். முல்லைத்தீவு மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் ந.தசரதராஜகுமார் நாடா வெட்டி நிலையத்தை திறந்தார். (ஐ-222)



## 50 பொலிஸாருக்கு பி.சி.ஆர். சோதனை

மட்டக்களப்பு, ஒக். 27

மட்டக்களப்பு பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்களுக்கு பி. சி. ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் முதற்கட்டமாக 50 பொலிஸாருக்கு நேற்று திங்கட்கிழமை பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

தற்போது நாட்டில் அதிகரித்துள்ள கொரோனா வைரஸ் பரம்பலை கட்டுப்படுத்தும் வகையில் நாடளாவிய ரீதியில் அரசஅலுவலகங்கள், திணைக்களங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கு பி.சி. ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் மட்டக்களப்பு பொலிஸ் நிலைய மக்கள் தொடர்பாடல் பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி ஜி.உதயகுமாரின் ஏற்பாட்டில் இந்த பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. (ஐ-இ)

## வைரஸை கட்டுப்படுத்தல் எமக்குப் பெரும் சவால்

### சுகாதார பரிசோதகர்கள் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக்.27

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப் படாமையால், வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதில் பல சவால்களை எதிர்கொண்டுள்ளோம் என பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

தற்போது கொரோனா வைரஸானது நாட்டின் 21 மாவட்டங்களுக்கு பரவியுள்ளது என பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் மகேந்திர பாலசூரிய தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது;

முதல் மற்றும் இரண்டாவது தொடர்புகளைத் தனிமைப்படுத்தவும், கொவிட்-19 நோயாளர்களை மருத்துவமனையில் சேர்க்கவும் சுகாதார மற்றும் பாதுகாப்பு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பொதுப் போக்குவரத்துகளைப் பயன்படுத்துபவர்கள் விழிப்புடனும், பாதுகாப்பு வழிகாட்டல்களை அவசியம் கடைபிடிக்கவும் வேண்டும்.

கொரோனா நோயாளிகள் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தலாம் என்பதால், ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்கள் இந்த விடயத்தில் விழிப்புடன் இருக்க வேண்டும்.

பொதுமக்களின் ஒத்துழைப்பு இல்லாது வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவது கடினம். ஆகவே நோயாளிகள் மற்றும் அவர்களுடன் தொடர்புகளை கொண்டவர்கள் குறித்து உடனடியாக தகவல்களை வழங்க வேண்டும் - என்றார். (ஐ-இ)

## ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பம் கோரல்

உடுவில், ஒக்.27

உடுவில் பிரதேச செயலகப் பிரிவில் அமைந்திருக்கும் கலாசார மத்திய நிலையத்தில் கலைப் பாடங்களை கற்பிப்பதற்கு ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கர்நாடக சங்கீதம்,பரதநாட்டியம்,மிருதங்கம், வயலின்,நாடகமும் அரங்கியலும் மற்றும் சித்திரமும் வடிவமைப்பும் ஆகிய பாடநெறிகள் கற்பிக்கப்பட வுள்ளன.

இதற்காக உடுவில் பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் குறித்த பாடங்களைக் கற்பிக்கக்கூடிய தகுதி வாய்ந்த ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கற்பிக்க ஆர்வமுள்ளவர்கள் தங்களது சுய விவரங்களை எதிர்வரும் நவம்பர் 5 ஆம் திகதிக்கு முன்னர் நிலையப் பொறுப்பதிகாரி,கலாசார மத்திய நிலையம் உடுவில் கற்பொக்கனை பிள்ளையார் கோவிலடி என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)

## 6 மாத சிசுவுக்கும் கொரோனா

### ராகமவில் அடையாளம்

கொழும்பு, ஒக்.27

இலங்கையில் மிகவும் வயது குறைந்த கொரோனா தொற்றாளியாக ஆறு மாதங்களே ஆன சிசு ராகம மருத்துவமனையில் பதிவாகியுள்ளது.

காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட இந்தச் சிசுவுக்கு பி.சி.ஆர் பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது.

பரிசோதனையின்போது குறித்த சிசுவுக்கு கொவிட் - 19 நோய் தொற்று ஏற்பட்டமை கண்டறியப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து சிசு மேலதிக சிகிச்சைகளுக் காக முல்லேரியா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளது. இந்த சிசுவின் தந்தை பேலியகொட கொவிட் கொத்தணியைச் சேர்ந்தவர் என்பது தெரியவந்துள்ளது. (ஐ-இ)

## இலவச கண் பரிசோதனை

யாழ்ப்பாணம், ஒக்.27

இலவச கண் பரிசோதனை அரியாலை புனித யூதாததேயு ஆலயத்தில் அண்மை யில் நடைபெற்றது. இதன்போது 60 பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன. (ஐ-இ)



# இன்றைய நாள்

**மேடம்:** அன்றாடப் பணிகள் சீராக முடியும். பலகாலத் தடை நீங்கும். கேட்ட இடத்தில் வீட்டுக்கடன், கல்விக் கடன் உதவி கிடைக்கும். பெண்கள் வழிபாட்டை மேற்கொண்டு நிம்மதி பெறுவீர்கள்.

**இடபம்:** தந்தை உதவுவார். கடன் சுமை சற்றுக் குறையும். மாமன், மைத்துனர் வழியில் சிறிய உரசல் உருவாகும். உஷ்ணம் சம்பந்தப்பட்ட நோய் ஏற்பட்டு குணமாகும்.

**மிதுனம்** சந்தோஷம் கூடும். வீடுவாங்கும் முயற்சி கைகூடும். வாக்குவாதத்தால் பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்பு உண்டு. பெண்கள் கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது.

**கடகம்:** நேற்றைய நெருக்கடி அகலும். புதிய வாய்ப்புகள் தேடி வரும். சகபணியாளர்களால் தொல்லை வரும். யாரோடும் பகை வேண்டாம். பிள்ளைகளின் முயற்சிகள் கைகூடும். உறவுகள் பலப்படும்.

**சிம்மம்:** பிள்ளைகளால் ஏற்பட்ட தொல்லை அகலும். கவனம் தேவை. நண்பர்கள் நல்ல தகவலைத் தருவர். பிறரால் விமர்ச்சிக்கப்படுவீர்கள். மனதில் அமைதி கிடைக்கும்.

**கன்னி:** பணியில் எல்லோரையும் அனுசரித்துச் செல்வது நல்லது. நேற்று எடுத்த தவறான முடிவை இன்று மாற்றிக் கொள்வீர்கள் வியாபாரிகளுக்குக் கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை.

**துலாம்:** உங்களின் செல்வாக்கு உயரும். வரவுக்குட்பட்ட செலவு சற்று கூடும். முக்கியப் பொறுப்புகளில் இருப்பவர்கள் கவனமுடன் செயல்படுங்கள். பகை தீர்ந்து நட்புணர்வு வரும்.

**விருச்சிகம்:** பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய முயற்சி வெற்றி தரும் நாள். புதிய மனிதர்களின் அறிமுகத்தால் நன்மைகள் கூடுதலாக வரும். சக பணியாளரால் ஏற்பட்ட சிக்கல் தீரும்.

**தனுசு:** கூடுதல் வருமானம் வரும். அலுவலகத்தில் மாற்றுக் கருத்துடைய ஒருவர் மனம் மாறுவார். உத்தியோகத்தில் அதி காரிகள் தவறுகளை சுட்டிக்காட்டினால் மாற்றிக் கொள்வது நல்லது.

**மகரம்:** கடன் கிடைப்பதில் இருந்த தடைகள் அகலும். பணவரவு திருப்தி தரும். நண்பர்களுடன் வீண் வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டும். யாரையும் எடுத்தெறிந்து பேசாதீர்கள்.

**கும்பம்:** பெண்கள் வீட்டிற்கு தேவையான பொருட்கள் வாங்குவீர்கள். சிக்கனத்தை கடைப்பிடிப்பீர்கள். பெண்களின் பிறந்த வீட்டிலிருந்து சுப வரவுகள் உண்டு.

**மீனம்:** இளைஞர்கள் கவனச் சிதறல் ஏற்பட அனுமதிக்காதீர்கள். உபாதைக்கு உரிய மருத்துவ சிகிச்சை எடுத்துக் கொள்ளுங்கள். பெண்கள் புதிய பொருள்கள் வாங்குவீர்கள்.

# அமெரிக்கா அதிகாரியின் விஜயம் இப்போது நாட்டுக்கு அவசியமா?

## கேள்வி எழுப்புகிறது ஜேவிபி



கொழும்பு, ஒக்.27

**இலங்கை கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அமெரிக்காவின் மிக முக்கிய அதிகாரியொருவர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள வேண்டிய அவசியம் என்னவென ஜேவிபியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமெரிக்க இராஜாங்க செயலாளருடன் பேசவுள்ள விடயங்கள் குறித்த உண்மையை அரசாங்கம் மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். யுத்தம் மற்றும் ஏனைய அவசரமான விடயங்களின்போது மாத்திரமே அமெரிக்க இராஜாங்க செயலாளர் விஜயம் மேற்கொள்வது வழமை. மைக்பொம்பியோவின் இந்த விஜ யத்தின்போது எம்.சி.சி உடன்படிக்கை குறித்து ஆராயப்படும் என நாம் கருதுகின்றோம். இலங்கையில் எம்.சி.சி உடன்படிக்கை குறித்த அலுவலகத்தை அமெரிக்கா தொடர்ந்தும் வைத்திருக்கின்றது இந்த நிலையில் இலங்கை அவசியமான - கடினமான முடிவுகளை எடுக்கவேண்டும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது. எனவே இது தொடர்பில் இலங்கை உரிய பதிலை வழங்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

# இந்தோ – பசுபிக் நோக்கத்தை ஊக்குவிப்பதற்காகவே பயணம்

## அமெ. இராஜாங்க செயலாளர் தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.27

அமெரிக்காவின் சகாக்களுடன் சுதந்திரமான வெளிப்படையான இந்தோ - பசுபிக் குறித்த பகிரப்பட்ட நோக்கத்தை ஊக்குவிப்பதற்காகவே ஆசியாவுக்கான தனது சுற்றுப்பயணம் இடம்பெறுகின்றது என அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோ குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா, இலங்கை, மாலைதீவு மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளுக்கான தனது சுற்றுப் பயணத்தை ஆரம்பித்துள்ள மைக்பொம்பியோ தான் விமானத்தில் ஏறும் படங்களை டுவிட்டரில் பகிர்ந்து, இந்த நாடுகளுக்கான “எனது விமானப்பயணம் ஆரம்பமாகிவிட்டது” எனத் தெரிவித்துள்ளார்.

“அமெரிக்காவின் சகாக்களுடன், சுதந்திரமான வலுவான செழிப்பான நாடுகளைக் கொண்ட, சுதந்திரமான வெளிப்படையான இந்தோ பசுபிக் குறித்து பகிரப்பட்ட நோக்கத்தை ஊக்குவிப்பதற்கு கிடைத்த வாய்ப்புக்கு நன்றி” எனவும் மைக்பொம்பியோ தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார். (ந-இ)



# கொழும்பு நகரில் 5,237 பி.சி.ஆர்.

கொழும்பு, ஒக்.27

மினுவாங்கொட கொவிட்-19 கொத்தணிப் பரவல் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து கொழும்பு நகராட்சி மன்ற எல்லைக்குள் மொத்தம் 5,237 பி.சி.ஆர். சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த சோதனைகளின் மூலம் 488 கொவிட்-19 நோயாளிகள் அடையாளம் காணப்படுட்டுள்ளனர் என கொழும்பின் தலைமை வைத்திய அதிகாரி ருவன் விஜயமுனி தெரிவித்தார். (ந-இ)

# மூன்று விசேட அதிரடிப்படை முகாம்கள் தனிமைப்படுத்தலில்

கொழும்பு, ஒக்.27

இலங்கையில் பத்துக்கும் மேற்பட்ட விசேட அதிரடிப்படையினர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டதை அடுத்து, களனி களுபோவில ராஜகிரிய பகுதிகளிலுள்ள மூன்று விசேட அதிரடிப்படை முகாம்களை அதிகாரிகள் தனிமைப் படுத்தியுள்ளனர் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பேலியகொட மீன்சந்தைக்கு மீன் வாங்குவதற்காக சென்றவர்களே இவ்வாறு கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட விசேட அதிரடிப்படையினரில் சிலர் முன்னர் விசேட பிரமுகர்களுக்குப் பாதுகாப்பை வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் என்றும் பொலிஸ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (ந-இ)

# மாகந்துர மதுஷ் பெயரில் டுபாயில் நட்சத்திர ஹொட்டல்

கொழும்பு, ஒக்.27

அண்மையில் கொலைசெய்யப்பட்ட பாதாள உலகக்குழுத் தலைவர் மாகந்துர மதுஷ் டுபாயில் 3 நட்சத்திர ஹொட்டல் ஒன்றை கொள்வனவு செய்துள்ளார்.

400 கோடி ரூபா பணம் செலவிட்டு அவர் குறித்த ஹொட்டலை கொள்வனவு செய்துள்ளார் என பொலிஸ் விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 60 அறைகளைக் கொண்ட இந்த ஹொட்டலில் நீச்சல் குளங்கள், நிகழ்வு மண்டபங்கள் உட்பட அனைத்து வசதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. போதைப்பொருள் விற்பனையில் கிடைத்த வருமானத்தில் இந்த ஹொட்டலை கொள்வனவு செய்வதற்கு 3 வருடங்களுக்கு முன்னர் மதுஷ் முதலீடு செய்யதுள்ளார். அத்துடன் மாகந்துரே மதுஷ் போலிப் பெயரில் விமான கடவுச்சீட்டு தயாரித்து டுபாயில் தங்கி யிருந்ததால் அவர் இந்த ஹொட்டலை தனக்கு நெருக்கமான இந்திய நாட்டவரின் பெயரில் கொள்வனவு செய்துள்ளார்ளனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ந-இ)

# தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் அதிக விலையில் பொருள்கள்




கொழும்பு, ஒக்.27
தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலாகியுள்ள சில பகுதிகளில் அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களும், முகக் கவசங்களும் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன எனத் தகவல் கிடைத் துள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவதைத் தவிர்க்குமாறு சம்பந்தப்பட்ட வர்த்தக தரப்பினருக்குத் தாம் அறிவுறுத்தியுள்ளோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இது குறித்து அவதானம் செலுத்தப்படுவதுடன், நுகர்வோர் அதிகார சபைக்கு அறிவித்து அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-இ)

## மோட்டார் வாகன திணைக்களங்களும் பூட்டு

கொழும்பு, ஒக்.27
நாரஹேன்பிட்டி மற்றும் வேரஹெர மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் பிரதான அலுவலகங்களை மறுஅறிவித்தல் வரை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
அத்துடன், தபால் மற்றும் உப தபால் அலுவலகங்களின் ஊடாக கடிதங்களை விநியோகிக்கும் நடவடிக்கையை மறு அறிவித்தல் வரை இரத்து செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் மேல் மாகாணத்திலும், காலி பிரதான தபால் காரியாலயம் மற்றும் அதன் உப தபால் அலுவலகங்கள் உட்பட ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள பகுதிகளில் கடிதம் விநியோகித்தல் இரத்து செய்யப்பட்டுள்ளது என்று தபால்மா அதிபர் தெரிவித்துள்ளார். (ந-இ)

# இரண்டு நாள்களுக்கு நாடாளுமன்றம் பூட்டு



கொழும்பு, ஒக்.27
கொரோனா அச்சம் காரணமாக நாடாளுமன்றக் கட்டடத் தொகுதி இரண்டு நாள்களுக்கு மூடப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.
இதனால் அதன் பணியாளர்கள் வீடுகளில் இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.
நாடாளுமன்ற பாதுகாப்புக்காக சேவையில் அமர்த்தப்பட்ட விசேட அதிரடிப்படையின் உறுப்பினர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.
இந்த விசேட அதிரடிப்படையினருக்கு கொரோனாத் தொற்று இருப்பது கண்டறியப்பட்டதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
நாடாளுமன்றக் கட்டடத்தொகுதி முற்றாக கிருமித் தொற்று நீக்கம் செய்யப்படவுள்ளதுடன், நாளை நாடாளுமன்றம் மீண்டும் பணிகளை ஆரம்பிக்கவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ந-இ)



# மழை வேண்டி வழிபாடுகள்!


### முல்லைத்தீவில்...

முல்லைத்தீவு, ஒக்.27
முல்லைத்தீவு மாவட்டத்தில் கால போக நெற்செய்கையை விவசாயிகள் மேற்கொண்டுள்ள நிலையில், மழை வேண்டி ஆலயங்களில் சிறப்பு வழிபாடுகளை நேற்றுமுன்தினம் மேற்கொண்டனர்.
முத்தையன்கட்டு குளக்கரையில் அமைந்துள்ள முத்துவிநாயகர் ஆலயத்தில் விவசாயிகள் மழை வேண்டி மூலஸ்தான பிள்ளையாருக்கு 1008 இளநீரால் அபிஷேகம் செய்துள்ளனர்.
புழுதி விதைப்பு மூலம் நெல் விதைக்கப்பட்ட போதும் சரியான காலத்துக்கு ஏற்றவகையில் சரியான மழைவீழ்ச்சி இதுவரை பதிவாகாத காரணத்தால் விதைத்த நெல் பயிர் ஆகமுடியாத நிலையில் விவசாயிகள் இந்த வழிபாடுகளை மேற்கொண்டனர். (ந-19)

★ ★ ★ ★

### கிளிநொச்சியில்...

கிளிநொச்சி, ஒக்.27
கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் மழை வேண்டி இரணைமடு கனகாம்பிகை அம்பாளுக்கு இருநூறுக்கும் மேற்பட்ட இளநீர் கொண்டு நேற்று விசேட அபிஷேகம் செய்துள்ளனர்.
இந்த வருடம் காலபோக நெற் செய்கையை ஆரம்பித்து ஒரு மாதம் கடந்துள்ள போதும், பருவமழை இன்மையால் அவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த விசேட இளநீர் அபிசேகம் மேற்கொள்ளப்பட்டது.
கிளிநொச்சி மாவட்டத்தில் இந்த முறை சுமார் 72,000 ஏக்கர் வரை விவசாயிகள் நெற் செய்கையை மேற்கொண்டுள்ளனர். அதிகளவு விவசாயிகள் மழையை நம்பியே காலபோகத்தை மேற்கொள்கின்றனர். மழையின்மையால் மாவட்டத்தின் பெருமளவு விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே நேற்றைய தினம் இரணைமடு கமக்கார அமைப்புக்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில், கிளிநொச்சி இரணைமடு கனகாம்பிகை அம்பாளுக்கு இருநூறுக்கும் மேற்பட்ட இளநீர் கொண்டு விசேட அபிசேகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ந-214,113)



## ஊரடங்கு சட்டம்: 1,076 பேர் கைது

கொழும்பு, ஒக்.27
ஊரடங்குச் சட்டத்தை மீறியகுற்றச்சாட்டில் இது வரை ஆயிரத்து 76 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.
நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேர காலப் பகுதியில் 152 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், 16 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
ஒக்ரோபர் 4 ஆம் திகதி தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதிலிருந்து, இது வரை 156 வானங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-இ)

# பொக்கணை மக்களுக்கு குடிதண்ணீர் திட்டம்




முல்லைத்தீவு, ஒக்.27
முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேசத்துக்குட்பட்ட பொக்கணைக் கிராம மக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட தூய குடிதண்ணீர்த்திட்டம் அமைக்கப்பட்டு நேற்று திறக்கப்பட்டது. பொக்கணைக் கிராம மக்கள் சுத்தமான குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்வதில் நீண்டகாலமாக பல்வேறு சவால்களை எதிர்கொண்டுள்ள நிலையில், பிரதேச சபை உறுப்பினர் எஸ்.கஜனின் ஏற்பாட்டில், பெரண்டினா நிறுவனத்தின் நிதி உதவியில் இது அமைக்கப்பட்டது.
பெரண்டினா நிறுவனத்தின் 16 இலட்சம் ரூபா செலவில் சுத்திகரிப்பு இயந்திரங்களும், புலம்பெயர் உறவு ஒருவரின் 4 இலட்சம் ரூபா நிதி உதவியில் கட்டடத் தொகுதியும் அமைக்கப்பட்டு தூய குடிதண்ணீர்த் திட்டம் வழங்கப்பட்டுள்ளது.
இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட செயலக மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், கரைதுறைப்பற்று பிரதேச சபைத் தவிசாளர் க.தவராசா மற்றும் கிராமசேவையாளர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மதகுருமார் எனப் பலர் கலந்துகொண்டனர். (ந-19)

# 15 பொலிஸ் பிரிவுகளுக்கு ரூ.5,000 வழங்கக் கோரிக்கை

கொழும்பு, ஒக்.27
ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள 15 பொலிஸ் பிரிவுகளுக்கு 5,000 ரூபா வழங்குவதற்கான நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக நிதி அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று கம்பஹா மாவட்டச் செயலாளர் தெரிவித்துள்ளார்.
அதனடிப்படையில் 4 இலட்சத்து 64 ஆயிரத்து 254 குடும்பங்களுக்கு வழங்குவதற்காக 232 கோடிக்கு அதிகமான பணத்தொகை வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
முதற்கட்டமாக மினுவங்கொட, திவுலுபிட்டிய மற்றும் வெயங்கொட பொலிஸ் பிரிவுகளுக்கு 5000 ரூபா இதுவரையில் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். (ந-இ)

# ஆபத்து குறைவடைந்தாலே கொழும்பில் ஊரடங்கு தளர்வு




**கொழும்பு, ஒக்.27**
**கொழும்பின் பல பகுதிகளில் விதிக்கப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டம் இப் பகுதிகளில் கொரோனா ஆபத்து குறைவடைந்த பின்னரே நீக்கப்படும். இவ் ஊரடங்கு தொடர்பில் மூன்று நாள்களுக்கு ஒருமுறை ஆராயப்படும் என அரசாங்க தரப்பு தகவல்கள் தெரிவித்துள்ளன.**

கொழும்பின் பல பகுதிகளில் நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதைத் தொடர்ந்தே ஊரடங்கு உத்தரவு பிறப்பிக் கப்பட்டுள்ளது. இவர்கள் தற்போது மிகவேகமாக பரவிவரும் பேலியகொட மீன்சந்தை தொற்றுடன் தொடர்புடையவர்கள்.

பொரளை, புறக்கோட்டை மற்றும் கோட்டை பகுதிகளில் பல நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்நிலையிலேயே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மூன்று நாள்களுக்கு ஒரு முறை நிலைமையை அதிகாரிகள் ஆராய்வார்கள், நோய் பரவல் தணிந்தால் ஊரடங்கை நீக்குவார்கள். ஊரடங்கு நடைமுறையில் உள்ள பகுதிகளில் பி.சி.ஆர். சோதனைகள் இடம்பெறும். கொழும்பின் ஏனைய பகுதிகளில் ஊரடங்கை அமுல்படுத்துவதற்கான திட்டம் எதுவுமில்லை, குறிப்பிட்ட ஒரு பகுதியில் குறிப்பிட்ட எண்ணிக்கையான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டால் அந்தப் பகுதியில் உடனடியாக ஊரடங்கை நடைமுறைப்படுத்துவோம் என அரச தரப்பு தகவல்கள் தெரிவித்துள்ளன. (ந-இ)




## ஓமான் விமானசேவை மீண்டும் ஆரம்பம்

கொழும்பு, ஒக்.27
ஓமான் நாட்டின் தேசிய விமான சேவையான "சுல்டானேட் ஓமான்" இலங்கைக்கான சேவையை நேற்று முன்தினம் முதல் ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில் ஓமான் எயார் குவைத், பஹ்ரெய்ன், மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு தமது சேவையை நீடித்துள்ளது என சுல்டான்னேட் ஓமான் அறிவித்துள்ளது.

இச் சேவை கொழும்புக்கு வாரத்தில் இரண்டு தடவைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. தமது விமானத்தில் பயணிப்போர் கொரோனா வைரஸ் முன்னேற்பாடுகள் தொடர்பில் உறுதி செய்யப்படுவர் என்று ஓமான் எயார் அறிவித்துள்ளது. (ந-இ)

## கொரோனா ஆபத்துள்ள பிரதேசங்கள் அடையாளம்

கொழும்பு,ஒக்.27
சுகாதார அமைச்சின் தொற்று நோய் பிரிவால், கொரோனா வைரஸ் பரவல் அபாயமுள்ள பிரதேசங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த 14 நாள்களில் காணப்பட்ட நிலவரத்தின் அடிப்படையில் இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. பிரதேச மருத்துவ அதிகாரிகள் (MOH) பிரிவுகளுக்கேற்ப இவை அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

அதற்கமைய அதிகூடிய அபாயமுடைய பகுதிகளாக யாழ் மாவட்டத்தில் வேலணை பகுதியும் கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை பகுதியும் வவுனியா மாவட்டத்தில் வவுனியாவும், புத்தளம் மாவட்டத்தில் புத்தளம் , ஆனைமடு மற்றும் முந்தல் ஆகிய பகுதிகளும், மாத்தளையில் பஸ்கொட மற்றுட் பெல்லேபொல, வில்கமுவ பகுதிகளும் அம்பாறை மாவட்டத்தில் மகாஓயா உள்ளிட்ட பகுதிகளும் அபாயமுடைய பகுதிகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

மொனராகலை மாவட்டத்தில் மெதகம, கேகாலை மாவட்டத்தில் மாவனெல்ல மற்றும் ரன்வெல, கண்டியில் யடிநுவர மற்றும் கங்காவத்த, நுவரெலியாவில் பம்பரதெனிய,
குருணாகல் மாவட்டத்தில் குளியாப்பிட்டி, நாரம்மல, பன்னல, அலவ்வ மற்றும் பொல்கஹாவெல, கம்பஹாவில் மீரிகம, திவுலபிட்டி, கட்டான, சீதுவ, மினுவாங்கொட, வத்தளை, ஜாஎல, அத்தனகல, வேயங்கொடை, கம்பஹா, றாகம, களனி, தொம்பே, பியகம, கிரிந்திவெல மற்றும் பூகொட ஆகியவை அபாயமுடைய பகுதிகளாகும். கொழும்பில் கடுவலை, கொத்தொட்டுவ, கொலன்னாவை, பத்தரமுல்ல, புறக்கோட்டை, நாவல, கஹதுட்டுவ, பிலியந்தல மற்றும் வத்துவ ஆகிய பகுதிகள் அபாயமுடையவையாகும். களுத்துறையில் மத்துகம, அம்பாந்தோட்டையில் சூரியவெள ஆகிய பகுதிகள் அபாயமுடையவையாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. (க-இ)

## ஊரடங்கு பகுதிகளில் விளையாட்டுக்களுக்கும் தடை

கொழும்பு, ஒக்.27
ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் பகுதிகளில், காட்ஸ் விளையாட்டு உட்பட விளையாட்டுக்கள் குழுவாக விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

கம்பஹா மாவட்டத்தில் 37 பொலிஸ் பிரிவுகளிலும், குளியாப்பிட்டியவில் 5 பொலிஸ் பிரிவுகளிலும் கொழும்பு மாவட்டத்தில் 15 பொலிஸ் பிரிவுகளிலும் களுத்துறையில் மூன்று பொலிஸ் பிரிவுகளிலும், வெல்லம்பிட்டிய, கொத்தட்டுவ, முல்லேரியாவ மற்றும் வெலிக்கடை ஆகிய பொலிஸ் பிரிவுகளிலும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் பிரதேசங்களில், வீதிகளில், ஒழுங்கைகளில் பொதுமக்கள் ஒன்றுகூடமுடியாது.

அத்துடன் அக்கம் பக்கத்தினருடன் விளையாடுவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. சமூக இடைவெளியைப் பேணும் வகையிலேயே இந்த அதிரடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-இ)

## குடும்பத்தவர்களுடன் மட்டுமே விழாக்கள்

கொழும்பு, ஒக்.27
நாட்டில் கொவிட் - 19 தொற்று அதிகரித்து வரும் நிலையில் விழாக்கள் மற்றும் இறுதிச் சடங்கு ஆகியன நடைமுறைப்படுத்துதல் தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெளிவுபடுத்தியுள்ளார்.

ஊடரங்குச் சட்டம் அமுலில் உள்ள பகுதிகள் மற்றும் ஏனைய பகுதிகளில் இடம்பெறவுள்ள திருமண விழா, விளையாட்டு விழாக்கள் போன்ற அனைத்து விழாக்களிலும் பங்கேற்பவர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டு இருக்க வேண்டும்.

திருமண விழாவின்போது சுகாதாரப் பிரிவில் ஆலோசனை பெற்று, பொலிஸாருக்கு அறிவித்து திருமணத்தில் கலந்துகொள்ள வேண்டிய முக்கியமான உறுப்பினர்கள் மாத்திரம் கலந்துகொண்டு திருமண விழாவை நடத்த முடியும்.

இறுதிச் சடங்கின்போது வேறொரு இடத்திலிருந்து வருதல் மற்றும் ஊரடங்கு உத்தரவு பிறப்பித்த இடத்திருந்து ஊடரங்கு பிறப்பிக்காத இடத்துக்கு வருதல் போன்றவற்றுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் நெருங்கிய உறவினராக இருந்தால் அனுமதி வழங்கப்படும் என்று பிரதிப் பொலிஸ்மா தெரிவித்துள்ளார். (ந-இ)

# சதொச, சிறப்பு அங்காடிகள் ஊடாக பொருள்கள் விநியோகம்

கொழும்பு, ஒக்.27
ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள பகுதிகளிலுள்ள சதொச மற்றும் சிறப்பு அங்காடிகளின் ஊடாக பொருள்களை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

90 ஆயிரம் மெட்றிக் தொன் கிலோகிராமுக்கும் அதிகளவான சீனி நாட்டிலுள்ள களஞ்சியசாலைகளில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், ஏனைய அத்தியாவசிய பொருள்களை இலங்கைக்கு கொண்டுவருவதற்கு தடைகள் எதுவும் இல்லை.

எனவே, ஊரடங்கு அமுலில் உள்ள பகுதிகளில் சதொச மற்றும் சிறப்பு அங்காடிகளின் ஊடாக பொருள்களை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

எனவே, பொதுமக்கள் அவசியமற்ற வகையில் பொருள்களை களஞ்சியப்படுத்துவதற்கான தேவை இல்லை.

நாடு முழுவதையும் முடக்குவதற்கான தீர்மானத்தை அரசாங்கம் இதுவரையில் மேற்கொள்ளவில்லை.

கொரோனாத் தொற்று உறுதியானவர்கள் அடையாளம் காணப்படுகின்ற பகுதிகளில் மாத்திரம் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். (ந-இ)

# பல்கலை பணியாளர்களுக்கு தனியான பஸ் சேவை

கிளிநொச்சி,ஒக்.27

நாட்டின் தற்போது எழுந்துள்ள சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, பொது மக்களின் பாதுகாப்புக் கருதி, பல்கலைக்கழகத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்குத் தனியான பஸ் சேவை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியிலுள்ள விவசாய பீடம், பொறியியல் பீடம், தொழில்நுட்ப பீடம் ஆகியவற்றில் பணியாற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பணியாளர்களுக்கான இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுக் காலத்தில் சன நெரிசலைத் தவிர்க்கும் வகையில், பணிக்குச் சென்று வருவதற்காக இந்த பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்று யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக பிரதிப் பதிவாளர் கே. ஞானபாஸ்கரன் அறிவித்துள்ளார்.

தினமும் காலை 7 மணியளவில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திலிருந்து இந்த பஸ் சேவை ஆரம்பிக்கப்படும். மாலையில் 4.15 மணியளவில் கிளிநொச்சி வளாகத்திலிருந்து யாழ். நோக்கிப் புறப்படும்.

இதற்கென 28 ஆசனங்களைக் கொண்ட பஸ் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ.5)



## வாழ்வாதார உதவி

கிளிநொச்சி,ஒக்.27

கிராமிய உட்கட்டுமான இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானால்,கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவில் வாழ்வாதார உதவித் திட்டங்கள் நேற்று வழங்கப்பட்டன.

கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 15 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன. கரைச்சி பிரதேச செயலக மண்டபத்தில், கரைச்சி பிரதேச செயலாளர் பி.ஜெயகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன், இராஜாங்க அமைச்சரின் வடக்கு மாகாண இணைப்பாளர் பாரதிதாசன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். (க-6)

## 50 பயனாளிகளுக்கு நாற்றுக்கள் வழங்கல்

முல்லைத்தீவு,ஒக்.27

கிராமங்களின் மனைப்பொருளாதார உற்பத்திகளை விருத்திசெய்யும் நோக்கில், புதுக்குடியிருப்பில் 50 பயனாளிகளுக்கு நாற்றுக்கள் வழங்கப்பட்டன.

புதுக்குடியிருப்பு - புதியகுடியிருப்பு பொது நோக்கு மண்டபத்தில், சமுர்த்தி திணைக்களம் ஊடாக கன்றுகள் வழங்கப்பட்டன.

ஒவ்வொரு கிராமத்திலும் 210 பயனாளிகளைத் தெரிவுசெய்து, அவர்களின் வீட்டுத் தோட்டச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில்,அரச திணைக்களங்களின் நிர்வாகப் பிரிவுகள் ஊடாக கன்றுகள் வழங்கப்பட்டன. (க-19)



# ஜனாதிபதியின் அதிகாரங்கள் துஷ்பிரயோகப்படுத்தப்படமாட்டாதாம்

### கருவின் நம்பிக்கை இது

கொழும்பு,ஒக்.27



புதிய 20 ஆவது திருத்தத்தின் ஊடாக உருவாக்கப்பட்டிருக்கும் மட்டற்ற உயர் அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி பதவி, தனிப்பட்ட நலன்களுக்காகப் பயன்படுத்தப்படமாட்டாது என்று நான் நம்புகிறேன் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட புதிய திருத்தச் சட்டம் தொடர்பில் தனது டுவிட்டர் பக்கத்தில் அவர் பதிவிட்டுள்ளதாவது:

உலகிலேயே தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட உயர் அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி ஒருவரை இலங்கை கொண்டுள்ளது. இவ்வாறான மட்டற்ற உயர் அதிகாரங்கள் தனிப்பட்ட நலன்களுக்காகப் பயன்படுத்தப்படாது என்று நம்புகின்றோம்.

அரசமைப்புக்கான 20 ஆவது திருத்தத்துக்கு அனுமதியளித்து சபாநாயகர் கையெழுத்திட்டமை வரவேற்கத்தக்கது - என்றுள்ளது. (க-இ)

## மஹரகமவில் 15 பேருக்கு கொரோனா

கொழும்பு,ஒக்.27

மஹரகம நகர சபைக்குட்பட்ட பிரதேசத்தில் 15 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று மகரகம சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

நாகஹவத்த, பன்னிப்பிட்டிய, வீரமாவத்த, பதிரகொட, ஜனதா மாவத்த,நாவின்ன, எரவ்வல, எம்புல்தெனிய மற்றும் ஜயகத் வீதி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 15 பேரே இவ்வாறு தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

இவர்கள் பேலியகொட மீன் சந்தை கொத்தணி மற்றும் துறைமுகக் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

## இகழ்ச்சியே வாழ்வை புகழ்ச்சிக்கு கொண்டு செல்லும்



சுகி.சிவம்

நீங்கள் அவமதிக்கப்பட்டவரா? பிறரால் அலட்சியப்படுத்தப்பட்டவரா? யாராவது உங்களை அவமானப்படுத்தியிருக்கிறார்களா? 'ஆம்' என்றால் நீங்கள் அதிர்ஷ்டசாலி. முன்னேறுவதற்கான மூலப்பொருள் உங்களிடம் உள்ளது. நம்ப முடியவில்லையா? இதிகாசங்களைப் பாருங்கள்.

தாய், தந்தை யார் என்று அறிய முடியாத அநாதை என்று கர்ணனைத் துரோணர் இகழ்ந்தார். "நீ என்ன ராஜகுமாரனா? தேரோட்டி மகன்" என்று அலட்சியப்படுத்தினார். விளைவு..? வளர்ந்தான்... வளர்ந்தான்... வானளாவ வளர்ந்தான். தேரோட்டி மகன் என்று கேலி பேசப்பட்டவன், சல்லியன் என்ற அரசன் தேரோட்டத் தேரேறி வந்தான். இகழ்ச்சியே அவனது வாழ்வைப் புகழ்ச்சி நோக்கிய பயணம் ஆக்கியது. எப்படி?

அள்ளிக் கொடுத்து, அள்ளிக் கொடுத்து வள்ளலாக வாழ்ந்தான். அவனிடம் மக்கள் கையேந்தினர். புலவர்கள் கை ஏந்தினர். அநாதை ஆக்கிய அம்மா குந்தியே கை ஏந்தினாள். அடுத்து தேவேந்திரன் வந்து, அருமை மகன் அர்ஜுனனுக்காகக் கவசகுண்டலங்களைக் கை ஏந்தி வாங்கினான். அதுவும் போதாது என்று அண்டசராசரங்களின் அருமைத் தலைவனாம் ஆண்டவன் கண்ணனே வந்து கை ஏந்தி, "கொடையால் விளைந்த புண்ணியத்தைக் கொடு" என்று கேட்டான். அம்மா, அப்பா பெயர் தெரியாத அநாதை என்று அவமானப்படுத்தப்பட்ட கர்ணன், 'அம்மா தாயே, நான் அநாதை' என்று கை ஏந்தாது அம்மா முதல் ஆண்டவன் வரை கை ஏந்திக் கேட்ட வள்ளலான வரலாற்றுக்கான வீரிய வித்து அவமதிப்பு.

அவமதிப்பு... அலட்சியம்... அவமானம். இவை யாவும் அக்கினிக் குஞ்சுகள். விண்ணில் பாயும் நம் வெற்றிக் கலனுக்கான எரிசக்திகள். பழைய ரயில் என்ஜினில் தகதகவென்று எரியும் நெருப்பைக் கண்டதுண்டா? அந்த நெருப்புதான் ரயிலை நகர்த்தும் ஜீவ சக்தி. அந்த என்ஜினின் நெஞ்சில் நின்று எரியும் நெருப்பு எத்தனை நெடிய பயணத்தை நிறைவேற்றும் தெரியுமா? அப்படியே உங்கள் நெஞ்சில் எரியும் நெருப்பை, அவமதிப்பை, வெற்றிக்கான எரிசக்தியாக்குங்கள். ஒரு நிமிடம்..! அவமதித்தவர்களைப் பழிவாங்கத் துடிப்பது அறிவீனம்.. அகங்காரம். அவமதித்தவரும் வருந்தும்படியாக ஏற்கும்படியாக வளர்வதே அங்கீகாரம். உன்னதமான முன்னேற்றம். தன்னை அவமதித்த பிரிட்டிஷ் அதிகாரியும் மதிக்கும்படி விஸ்வரூபம் எடுத்தவர் மகாத்மா காந்தி. மாறாகப் பழிவாங்கத் துடித்தவர்கள் பாழானதுதான் மிச்சம்.

வேடிக்கையான கதை ஒன்று. ஓர் அரசர் அருமையாகப் பாடிய வித்வானிடம், "பரிசாக என்ன வேண்டுமானாலும் கேளும் தருகிறோம்" என்று அறிவித்தார். வித்வானோ, நாள்தோறும் அரசர் குளிக்கும் காவல்குளத்துக்கு அரசரை அழைத்துவந்து குளத்தில் இறங்கி வாய் கொப்பளித்துத் துப்பினார். காவலுக்கு நின்ற சேவகனைப் பார்த்து, "பார்... பார்... நன்றாகப் பார்த்துக் கொள்" என்று கத்தினார்.

அரசருக்கு ஒன்றும் புரியவில்லை. நடந்தது இதுதான். வித்வான் அரண்மனைக்கு வரும்போது. அது அரசர் குளிக்கிற குளம் என்று தெரியாமல் அதில் இறங்கிக் கைகால் கழுவிவிட்டார். காவலன் அவரை அடித்து, "ராஜா பார்த்திருந்தால் உன் தலையே போயிருக்கும்" என்று தள்ளிவிட்டான். தன்னை அவமதித்த காவலனை அரசர் முன்பு பழி வாங்கத் தமக்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திவிட்டார் முட்டாள் பாகவதர். ஆனால் அது சரியல்ல. பின் எப்படி ஜெயிக்க வேண்டும்?

அண்மையில் கவியரசர் கண்ணதாசன் பற்றி அவரது அருமை மகன் காந்தி கண்ணதாசன் ஒரு செய்தி சொன்னார். செட்டி நாட்டிலிருந்து சினிமாக் கனவுகளுடன் பதினாலு வயதுப் பையனாகச் சென்னை வந்தார் கவிஞர். அன்று இரவு படுக்க இடமின்றி மெரினா பீச்சில் காந்தி சிலைக்குப் பின்னால் பெட்டியைத் தலைக்கு வைத்துப் படுத்திருக்கிறார் கவிஞர்.

நள்ளிரவு. பொலிஸ்காரரின் உருட்டுத்தடி அவரைத் தட்டி மிரட்டியது. காலையில் நகரத்தார் விடுதிக்குப் போக வேண்டும். இரவு மண்ணடி வரை போக முடியாது. அதனால் பீச்சில் படுத்துக் கொள்ள அனுமதி கேட்ட அந்தப் பதினாலு வயதுப் பையனின் கோரிக்கையைப் பொலிஸ் நிராகரித்தது. "படு... படுக்கணும்னா நாலணா குடு" என்று காவல் மிரட்டியது. நாலணாவுக்கு வழியின்றி கலங்கிய கண்களுடன் காந்தி சிலையில் இருந்து நடந்திருந்திருக்கிறார் கண்ணதாசன்.

அவர் வளர்ந்து கவியரசாகி 'சுமைதாங்கி' என்ற சொந்தப் படம் எடுக்கிறார். கதாநாயகனாக நடித்த ஜெமினி கணேசனை எங்கிருந்து நடக்க விடுவது என்று யோசித்த கவிஞர் அதே காந்தி சிலையைத் தேர்ந்தெடுத்தார். நள்ளிரவு ஷூட்டிங். ஆனால் படத்தில் இரவு 7 மணி மாதிரி இருக்க பீச் ரோட்டில் நிறைய கார்கள் வரிசையாக வரவேண்டும். ஏழு கார்களை நிற்கவைத்து மாறிமாறி ஒன்றன்பின் ஒன்றாக வருகிற மாதிரி படம் எடுக்கிறார்கள். வீட்டில் இந்தப் படத்தைப் போட்டுப் பார்த்துக் கொண்டிருந்த கவிஞர், பிள்ளைகளைப் பார்த்துச் சொல்லியிருக்கிறார். "இந்தக் கார்களைக் கவனித்தீர்களா? இவை எல்லாமே நம்முடைய கார்கள். வாழ முடியும் என்ற நம்பிக்கையோடு சென்னை வந்த என்னை இந்த இடத்தில்தான் நாலணா இல்லை என்று பொலிஸ் நடக்கவிட்டது... இதே இடத்தில் இன்று என் ஏழு கார்களை ஓடவிட்டுப் படம் எடுத்திருக்கிறேன். நம்பிக்கை என்னை ஜெயிக்க வைத்து விட்டது" என்றாராம். எங்கு அவமதிக்கப்பட்டாரோ, அங்கு கவிஞர் தம் வெற்றியை அரங்கேற்றியிருக்கிறார். அவமானம் ஒரு மூலதனம்... இது புரிந்தால் வெற்றி நிச்சயம்!

# தென்கிழக்கு திசையில் இருந்து....

அனார்கலி





## பாதீடுகள்

அம்பாறை மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி சபைகள் 2021ஆம் ஆண்டுக்கான பாதீடு (வரவு- செலவுத் திட்டம்) களைத் தயாரிக்கும் நடவடிக்கைகளை மும்முரமாக முன்னெடுத்து வருகின்றன.

இதற்கு முன்னோடியாக மாவட்டத்திலுள்ள பிரதேச சபைகள், நகர சபைகள் மாநகர சபை என்பன பாதீடு தயாரிப்பது தொடர்பான விசேட கலந்துரையாடல்களையும் நடத்தி வருகின்றன.

பிரதேச மக்கள் பிரதிநிதிகள், சபை உறுப்பினர்கள், பொது மக்கள் ஆகியோரின் ஆலோசனைகளுடன் குறித்த பாதீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

அடுத்த மாதம் குறித்த பாதீடுகள் உள்ளூராட்சி சபைகளின் அமர்வுகளில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்படவுள்ளன.

**தோல்வியைச் சந்திக்கும் சந்தர்ப்பங்களும் வரலாம்.**



## நவராத்திரி விழா

அட்டப்பள்ளம் ஸ்ரீ சிங்காரபுரமாரியம்மன் ஆலயத்தில் வருடாந்த நவராத்திரி விழா, கொரோனா பரவல் சுகாதார ஆலோசனைகளுக்கு அமைவாக சிறப்புற நடைபெற்று வந்து நேற்று முன்தினம் 25 ஆம் திகதியுடன் நிறைவு பெற்றது. கடல்நீர் எடுத்து வந்து சங்காபிசேத்துடன் கதவு திறந்து நடைபெற்று வந்த இந்த நவராத்திரி விழா தீ மிதித்தலுடன் நிறைவு பெற்றது என ஆலய நிர்வாகம் தெரிவித்தது.

**சிறப்பு மிகுந்த அனுஷ்டானம்**



## நிரந்தரமாக்குக!

கிழக்கு மாகாண சபையின் கீழ் தற்காலிக ஊழியர்களாகக் கடமையாற்றும் தொழிலாளர்கள் அனைவரையும் நிரந்தர நியமனத்துக்குள் உள்வாங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும், பத்மநாபா மன்ற முக்கியஸ்தருமான இரா. துரைரெத்தினம் இது தொடர்பான கோரிக்கையை விடுத்துள்ளார். இக் கோரிக்கையை வலியுறுத்தி முன்னாள் உறுப்பினர் துரைரெத்தினம் உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சருக்கு மகஜர் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளார்.

**"எளிதில் நிறைவேறுமா இக் கோரிக்கை?"**






## முதன்மைச் சங்கம்

கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பிரிவில் கூட்டுறவின் பண்புகளை முன்னெடுத்து நிந்தவூர் 23 ஆம் பிரிவு விவசாயிகள் அபிவிருத்தி சிக்கன கடனுதவி கூட்டுறவுச்சங்கம் முதற்றதர சங்கங்களுள் ஒன்றாகத் திகழ்கின்றது. இவ்வாறு கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பிரிவின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.ஜாபீர் புகழாரம் சூட்டினார்.

சங்கத்தின் 18 ஆவது வருடாந்த பொதுச்சபைக் கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

**"கூட்டுறவே நாட்டுயர்வு"**




## மூடப்படவில்லை!

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய அலுவலகம் கொரோனா வைரஸ் பரவல் தொடர்பானசுகாதாரஆலோசனைகளைப்பின்பற்றி தொடர்ந்தும் இயங்கி வருகின்றது என பிராந்திய இணைப்பாளர் ஏ.எல்.இஸதீன் அறிவித்துள்ளார். கொரோனா காரணமாக தமது அலுவலகம் மூடப்பட்டுள்ளது என சில ஊடகங்களில் வெளியான செய்தி தவறானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.


**"மனித உரிமைகள் பேணுவோம்"**

## கோழி இறைச்சி விலை வீழ்ச்சி

தென்கிழக்கின் பல பிரதேசங்களிலும் கோழி இறைச்சி நிலை திடீரென வீழ்ச்சி கண்டுள்ளது. ஏற்கனவே ஒரு கிலோ கோழி இறைச்சி 550 ரூபாவாக விற்பனையாகி வந்தபோதிலும் தற்சமயம் ஒரு கிலோ 370 ரூபாவாக வீழ்ச்சிகண்டுள்ளது.

கல்முனை, அக்கரைப்பற்று போன்ற முக்கிய வர்த்தக நகரங்களில் கோழி இறைச்சி வியாபாரிகள் ஏட்டிக்குப் போட்டியாக விலைக்குறைப்பைச் செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

**கொரோனா– காலத்தின் கோலம் இது!**



## '20' ஆதரவு எதைக் காட்டுகிறது?

நாடாளுமன்றத்தில் '20' ஆம் திருத்தச் சட்டத்திற்கு ஆதரவாக, முஸ்லீம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினர்கள் வாக்களித்துள்ளமை வட கிழக்கு முஸ்லீம்களின் அரசியல் அவல நிலையை வெளிப்படுத்தியுள்ளது என ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எம்.ரி.ஹஸனலி கருத்து தெரிவித்தார்.

ஜனாதிபதித்தேர்தல்பிரச்சாரத்தில்கோட்டா அரசைக்கடுமையாகவிமர்சித்தஅவர்கள் சில மாதங்களே கடந்த நிலையில், அடித்துள்ள இந்த 'பல்டி', வாக்களித்த மக்களையே உதறித் தள்ளிய செயலல்லவா? எனவும் ஹஸனலி கேள்வி எழுப்பினார்.

**"அவலம், அவலம்! பேரவலம்!!"**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்;

# வெளிநாட்டு உளவு எச்சரிக்கை மைத்திரிக்குத் தெரியாதாம்

**கொழும்பு, ஒக்.27**

**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் வெளிநாட்டு உளவுத்துறையின் எச்சரிக்கை குறித்து தனக்கு யாரும் தெரியப்படுத்தவில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை இடம்பெற்ற போது மைத்திரிபால சிறிசேன இந்த சாட்சியத்தை வழங்கியுள்ளார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களை விசாரிக்கும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் முன், கொழும்பு பேராயரை பிரதிநிதித்துவப்படுத்தும் ஜனாதிபதியின் ஆலோசகர் பி.சி.ஷாமில் பெரேரா மைத்திரிபாலவை குறுக்கு விசாரணை செய்தார்.

ஏதேனும் முக்கியமான தேசிய பாதுகாப்புத் தகவல்கள் இருந்தால், நேரடியாகத் தமக்கு தெரிவிக்க வேண்டும் என்று அரச புலனாய்வின் முன்னாள் பணிப்பாளர் நிலந்த ஜெயவர்தனவுக்கு சாட்சியான மைத்திரிபால சிறிசேன அறிவுறுத்தியிருந்தாரா என்று இதன் போது சட்டத்தரணி கேள்வி எழுப்பியுள்ளார். இதற்குப் பதிலளித்த சிறிசேன தாம் தேசியப் பாதுகாப்புப் பேரவையில் வைத்து நிலந்த ஜெயவர்தனவுக்கு இது தொடர்பில் அறிவுறுத்தினார் என குறிப்பிட்டுள்ளார். எனினும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடக்கும் வரை இந்த துரதிர்ஷ்டத்தை யாரும் தனக்குத் தெரிவிக்கவில்லை என்றும் மைத்திரி தெரிவித்துள்ளார்.

2019 ஜனவரி 1 முதல் 2019 ஏப்ரல் 31 வரை நிலந்த ஜெயவர்தனவுக்கும் சாட்சிக்கும் இடையில்; 221 தொலைபேசி அழைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தரவுகள் காட்டுகின்றன என சட்டத்தரணி சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்குப் பதிலளித்த முன்னாள் ஜனாதிபதி, "பதிவுகள் இதைக் காட்டினாலும், அவரை பலமுறை அழைத்தது எனக்கு நினைவில் இல்லை. நிலந்த எனது இலக்கத்தை பல முறை அழைத்தாரா என்று எனக்குத் தெரியவில்லை. பல அழைப்புகளுக்குப் பதிலளிக்க எனக்கு நேரம் இல்லை. இந்தத் தொலைபேசிப் பதிவுகளைப் பற்றி எனக்குப் பெரிய புரிதல் இல்லை. தொலைபேசித் தரவுகள் இருந்த போதிலும் நான் அவரிடம் பல முறை பேசியதை ஏற்கப் போவதில்லை. நிலந்த எனது அதிகாரிகளைத் தொலைபேசியில் அழைத்திருக்கலாம், ஆனால் நான் அவரிடம் அந்தளவு நேரம் பேசினேன் என்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது - என்றார்.

(ப)

## இரு குழந்தைகளுக்கும் தந்தைக்கும் கொரோனா

இரத்தினபுரியில் கிராமங்கள் முடக்கம்

கொழும்பு, ஒக். 27

இரத்தினபுரி பொலிஸ் பிரிவில் ஒரே நாளில் நான்கு கொரோனா நோயாளர்கள் கண்டு பிடிக்கப்பட்டனர். அதனையடுத்து அங்கு பல கிராமங்கள் சுகாதார மற்றும் பாதுகாப்புத் துறையின் உத்தரவுகளுக்கு இணங்க இன்று தொடக்கம் மறுஅறிவித்தல் வரை முடக்கப்பட்டுள்ளன.

பேலியகொட மீன் சந்தை கொரோனா கொத்தணியுடன் தொடர்புடைய இரத்தினபுரி மல்வல எம்புல்தெனிய கிராமத்தின் நபர் மற்றும் அவரின் இரண்டு குழந்தைகளுக்கும் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது. இதேபோன்று எஹலியகொட பிரதேசத்தில் ஒருவருக்கும் தொற்று ஏற்பட்டுள்ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து இரத்தினபுரி பொலிஸ் அதிகார பிரதேசத்தின் எகொட ஸ்ரீபாகம, உதுரு கிலீமல, தகுனு கிலீமல, கெட்டவல, மாபலான ஆகிய கிராமங்கள் முடக்கப்பட்டன.

மேலும் நேற்றுக்காலை தொடக்கம் குருவிட்ட ஹேனெகம ஓலுகல வீதி, குருவிட்ட ரத்துருகல ஆகிய வீதிகளும் அவற்றில் உள்ளடக்கப்படும் சில கிராம்ப் பகுதிகளும் மறுஅறிவித்தல் வரை முடக்கப்பட்டுள்ளன.

ஏனைய கிராமங்களில் வாழும் மக்கள் சுகாதார அறிவுறுத்தல்களை முழுமையாகப் பேணுவதன் மூலம் தத்தமது பிரதேசங்கள் முடக்கப்படும் அச்சுறுத்தலில் இருந்து பாதுகாத்துக் கொள்ளலாம் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

(கு-22)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

மலர்வு : 18.11.1946 உதிர்வு : 30.09.2020

அமரர்
குணரட்ணம் அகிலாண்டேஸ்வரி
( குணரட்ணம் ஸ்ரோர்ஸ் - வவுனியா,
மனோகரா திரையரங்கு - யாழ்ப்பாணம் )





கடந்த 30.09.2020 அன்று இறைபதமெய்திய எங்கள் குடும்பத் தலைவியின் மரணச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி வாயிலாகவும் மலர் வளையம் வைத்து ஆறுதல் தெரிவித்து துயரில் பங்குகொண்ட உற்றார், உறவினர்கள், அயலவர்கள், வைத்தியர்கள், தாதியர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை (28.10.2020) புதன்கிழமை கிரிமலையிலும் 30.10.2020 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம் .

இல . 64 மில் வீதி , வவுனியா .

குடும்பத்தினர்.

# வெளிமாவட்ட வீதியோர வியாபாரிகளுக்கு தடை

## கரைதுறைப்பற்று தவிசாளர் அறிவிப்பு



**முல்லைத்தீவு, ஒக்.27**

**முல்லைத்தீவு கரைதுறைப்பற்றுப் பிரதேசத்தில் வெளிமாவட்டத்தைச் சேர்ந்த வீதியோர வியாபாரிகளின் வியாபார நடவடிக்கை தடைசெய்யப்பட்டுள்ளது என்று கரைதுறைப்பற்று பிரதேச சபைத் தவிசாளர் க.தவராசா தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாடு முழுவதும் வேகமாக கொரோனா பரவிக்கொண்டிருக்கின்றது. கரைதுறைப்பற்று பிரதேச சபை எல்லைக்குள் நோய்த் தொற்று தொடர்பில் கலந்துரையாடப்பட்டு தொற்றைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி வெளிமாவட்டங்களில் இருந்து வர்த்தக நோக்கத்துடனோ ஏனைய நோக்கத்துடனோ யாரும் வருவது தடைசெய்யப்படவேண்டும். முன்னர் கொரோனா பரவிய போது இருந்த முன்னாயத்தங்கள் தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் இல்லாததை அவதானிக்க முடிகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் முன்பு இருந்த தடைகள் எதுவும் தற்போது இல்லை.

தனியே முகக்கவசங்கள் அணிய வலியுறுத்தப்படுகின்றது. வெளிமாவட்ட வீதியோர வியாபாரிகள் வியாபாரம் செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. வெளிமாவட்டங்களைச் சேர்ந்த பலர் முல்லைத்தீவு மாவட்டத்தில் தலைமறைவாக இருக்கின்றார்கள்.

எனவே ஆபத்தான கொரோனாத் தொற் றில் இருந்து மக்கள் அனைவரையும் பாதுகாக்க வேண்டிய முன்னாயத்த வேலைகளை முன்னெடுத்துள்ளோம் - என்றார். (ஐ-19)

## அரசாங்க அறிவித்தல்
## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்
## நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2021

மாவட்ட செயலாளர், யாழ்ப்பாணம் சார்பில் யாழ் மாவட்ட செயலக திணைக்களப் பெறுகைக் குழுவினால் யாழ் மாவட்ட செயலகம், மற்றும் யாழ் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் என்பவற்றிற்கு 2021ம் ஆண்டுக்கு கீழ்க் குறிப்பிடப்படும் வேலைகளை மேற்கொள்வதற்கும், பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக வடபிராந்தியத்திலுள்ள நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பதிவு செய்ய விரும்புபவர்கள் விண்ணப்பப் படிவங்களை மாவட்டச் செயலக பெறுகை அலகு (அறை இல: 42). மற்றும் பிரதேச செயலகங்களில் **2020-10-28ந்** திகதி தொடக்கம் **2020-11-27ந்** திகதி வரை அலுவலக நேரத்திலோ அல்லது WWW.jaffna.dist.gov.lk என்ற இணையத் தளத்திலிருந்து தரவிறக்கம் செய்தோ பெற்றுக் கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை **2020-11-30** இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கடித உறையின் (9"x4" ) இடது பக்க மேல் மூலையில் "நிர்மாணதாரர்கள் மற்றும் வழங்குநர்களை பதிவு செய்தல் - 2021" எனக் குறிப்பிட்டு "அரசாங்க அதிபர், பெறுகை அலகு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்" எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். நேரடியாகக் கையளிப்பதாயின் மாவட்டச் செயலகத்தின் பெறுகை அலகில் (அறை இல:42) சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலும் விண்ணப்பிக்க விரும்புபவர்கள் கட்டட நிர்மாண வேலைகளுக்கு கீழே உள்ள கட்டண விபரத்திற்கமையவும், ஏனைய வழங்குநர்கள் தொகுதி ஒன்றிற்கு ரூபா 500/= இனையும் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக "மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்" எனும் பெயரில் உள்ள 7041946 எனும் இலக்க இலங்கை வங்கி கணக்கில் வைப்பில் இடப்படல் வேண்டும். பதிவு செய்யப்பட்டுள்ள சங்கங்கள் இப்பதிவுக்கட்டணத்தை செலுத்தத் தேவையில்லை. வைப்பிலிடப்பட்ட பணத்திற்கான வைப்புச் சிட்டை விண்ணப்ப படிவத்துடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும். அவ்வாறு இணைத்து அனுப்பப்படாத விண்ணப்பங்களும் **2020-11-30** க்கு முன்னர் கிடைக்கபடாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

| ஒப்பந்த தொகை | பதிவுக் கட்டணம். |
|---|---|
| ரூபா 2,000,000 க்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகை | ரூபா 2,000 |
| ரூபா 2,000,000 க்கு அதிகமானதும் ரூபா 5,000,000 க்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகைக்கு | ரூபா 3,000 |
| ரூபா 5,000,000 க்கு அதிகமானதும் ரூபா 10,000,000 க்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்த தொகைக்கு | ரூபா 5,000 |

**வேலைகள், பொருட்கள் மற்றும் சேவைகளின் தெகுதி விபரம்.**

1. காகிதாதிகள், எழுதுகருவிகள், மற்றும் பாடசாலை உபகரணங்கள்.
2. கணனிகள், அச்சிடும் உபகரணங்கள், மற்றும் தகவல் தொழில்நுட்ப சாதனங்களும், அவற்றுக்கான உபகரணங்கள், மற்றும் நுகர்வுப் பொருட்கள். (ரோனர் மற்றும் றிபன்)
3. அச்சிடுதல், புத்தகம் கட்டுதல், இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள் பிளாஸ்ரிக் பெயர் பலகைகள், மற்றும் அலுவலக அடையாள அட்டைகள்.
4. இலத்திரனியல் மின்சாரப் பொருட்கள் மற்றும் மின் உபகரணங்கள்.
5. இயந்திரங்களும் அதன் உதிரிப்பாகங்களும்.
6. மோட்டார் வாகனங்களின் உதிரிப்பாகம் வழங்கல், திருத்துதல்.
7. விளையாட்டுப் பொருட்கள் மற்றும் சேவைகள்
8. காலை, மதிய, மற்றும் இரவு, உணவு வகைகள், சிற்றுண்டி வகைகள்.குடிநீர்வகைகள், பால் மா வகைகள், உள்ளூர் உணவு உற்பத்தி மற்றும் சிற்றுண்டி வகைகள்.
9. அழகு சாதனப் பொருட்கள், பிளாஸ்ரிக் உற்பத்திகள், தோல் உற்பத்திகள், மற்றும் சமயல் உபகரணங்கள். (சில்வர் மற்றும் ஏனையவை )
10. கட்டிடப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள்
11. மேசைவிரிப்புக்கள், படுக்கை விரிப்பு, நிலவிரிப்புக்கள், மற்றும் துணிவகைகள்
12. தளபாடம் மற்றும் திருத்தம்
13. விவசாய உபகரணங்கள்.
14. மீன் பிடி உபகரணங்கள்
15. மருந்துப் பொருட்களும் உபகரணங்களும்.
16. சூரிய மின் கலங்கள் மற்றும் திருத்தங்கள்
17. நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள்
18. கட்டிடங்கள், வீதிகள், பாலங்கள் நிர்மாணிப்புக்கள்
19. பாதுகாப்பு சேவை, ஒலிபெருக்கி மற்றும் ஒலிவாங்கி சேவை, புகைப்படப்பிடிப்பு, ஒளிப்படப்பிடிப்பு, படைப்பு (புத்தாக்க) முகவர். (Creative agencies), வளிபதனாக்கிகள் சுத்திகரிப்பு சேவை, பிரதியெடுக்கும் இயந்திர சுத்திகரிப்பு, மோட்டார் வாகன சுத்திகரிப்பு சேவை, மலசல கூடங்கள் சுத்திகரிப்பு மற்றும் அலுவலக சுத்திகரிப்பு சேவை.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக்குழு,
மாவட்டச் செயலாளருக்காக,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

# பொம்பியோ வருகைக்கு சீனா கடும் கண்டனம்!

கொழும்பு, ஒக்.27

இலங்கைக்கு தேவையற்ற பிரச்சனைகளைக் கொண்டுவரவேண்டாம் என அமெரிக்க இராஜாங்க செயலர் மைக் பொம்பியோவின் இன்றைய பயணத்தை முன்னிட்டு இலங்கைக்கான சீனத் தூதரகம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

அமெரிக்க முதன்மை பிரதி உதவி இராஜாங்க செயலர் டீன் தொம்ஸன் இராஜாங்க செயலாளரின் எதிர்வரும் விஜயம் தொடர்பாக நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் சீனா இலங்கை உறவு தொடர்பாக பகிரங்கமாக வலியுறுத்தல் விடுத்ததுடன் தலையீடு செய்தமை மட்டுமன்றி வெளிநாட்டு உறவுகள் தொடர்பாக 'கடினமானதும் ஆனால் தேவையானதுமான தீர்மானங்களை' இலங்கை மேற்கொள்ள வேண்டும் என்று கோரியிருந்தமையானது இராஜதந்திர நெறிமுறைகளை அப்பட்டமாக மீறுவதாகும்.

சீனா மற்றும் இலங்கை மக்கள் கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டுகளாக நட்பு பரிமாற்றங்களின் வரலாற்றைக் கொண்டுள்ளனர். ஒருவருக்கொருவர் உறவுகளைக் கையாள எங்களுக்கு போதுமான ஞானம் உள்ளது மேலும் ஆணையிட மூன்றாம் தரப்பு தேவையில்லை.

சீனா இலங்கை உறவுகளை விதைப்பதற்கும் தலையிடுவதற்கும் இலங்கையை வற்புறுத்துவதற்கும் கொடுமைப்படுத்துவதற்கும் வெளியுறவுத்துறை செயலாளரின் வருகையை அமெரிக்கா பெறுவதை நாங்கள் உறுதியாக எதிர்க்கிறோம்.

அதே நேரத்தில், உண்மையான நண்பர்கள் தங்களை மறுபக்கத்திலுள்ளவர்களின் நிலைநின்று நோக்க வேண்டும் என்று நாங்கள் அமெரிக்காவுக்கு உண்மையாக அறிவுறுத்துகிறோம்.

சமீபத்தில், ஒரு உயர் மட்ட சீனக் குழுவும் இலங்கைக்குப் பயணம் செய்தது. இலங்கையின் தொற்றுநோய்க்கு எதிரான போராட்டம் மற்றும் பொருளாதார புத்துயிர் பெறுவதற்கு தேவையான உதவிகளையும் ஆதரவையும் கொண்டு வந்தது. மேலும், தொற்று நோய் ஏற்கனவே சீனாவில் திறம்பட கட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும், அபாயங்களைக் குறைப்பதற்கும், புரவலன் நாட்டை மதிப்பதற்கும், சீனக் குழு அதன் செயற்பாடுகளையும் பணியாளர்களையும் முடிந்தவரை குறைத்து, இலங்கையின் தொற்றுநோய் தடுப்பு வழிகாட்டுதல்களைக் கண்டிப்பாகக் கடைப்பிடித்து, உறுதியாகத் தவிர்த்தது புரவலன் நாட்டிற்கு ஏதேனும் சிக்கல் வருவதைத் தவித்திருந்தோம்.

இராஜாங்க செயலாளரின் வருகைக்காகவும் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர நாடுகளுடனான உறவுகளை கையாளுவதற்காகவும் சில குறிப்புகளை வழங்குவோம் என்று நம்புகிறோம் இந்த நடைமுறைகளை அமெரிக்காவுடன் பகிர்ந்து கொள்ள நாங்கள் தயாராக இருக்கின்றோம் என்றுள்ளது.

(எ-22)

# பி.சி.ஆர்.சோதனை இதுவரை 4,50,000



கொழும்பு,ஒக்.27

இலங்கையில் இதுவரை 4 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பி.சி.ஆர்.சோதனைகள் முடிவடைந்துள்ளன என்று கொவிட்- 19 தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

அதேவேளை தற்போது தொற்றாளர்கள் அதிகரித்துள்ளதால், பி.சி.ஆர். பரிசோதனைகளை அதிகரிக்குமாறு பலதரப்பட்டவர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-இ)



# கொரோனா பரவல்; மீனவ சமூகம் பாதிப்பு

கொழும்பு, ஒக்.27
மீன்பிடியுடன் தொடர்புடையதாகக் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவிச் செல்லும் நிலை காரணமாக மீன்பிடிச் சமூகம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்று அகில இலங்கை பொது மீனவர் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

படகுகள் மற்றும் களஞ்சியசாலைகளில் சேமித்து வைக்கப்பட்டுள்ள மீன்களை விற்க ஏற்பாடு செய்யுமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று அகில இலங்கை பொது மீனவர் சம்மேள தேசிய அமைப்பாளர் ரத்ன கமகே தெரிவித்துள்ளார். (ப)

## துமிந்தவின்...

கோரி ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைச்சாத் திட்டுள்ள மனுவில் தமிழ் முற்போக்குக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களும் கையொப்பமிட்டுள்ளனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த முற்போக்கு கூட்டணியின் இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொதுவானதொரு இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே இந்த முடிவுஎடுக்கப்பட்டது என்று தெரிவித்துள்ளனர்.

நேற்று அறிக்கை ஒன்றை விடுத்துள்ள ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், இளையோர் நீண்டகாலமாக சிறையில் வைக்கப்படக்கூடாது. குற்ற செயல்களில் ஈடுபடும், இளையோருக்கு திருந்தி வாழ வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். இது என் பொதுவான கொள்கை நிலைப்பாடு என்று தெரிவித்துள்ளார். மனோ கணேசனின் ஜனநாயக மக்கள் முன்னணியும், தமிழ் முற்போக்குக் கூட்டணியில் அங்கம் வகிக்கின்றது.

முல்லேரியா துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரிமேச்சந்திர உட்பட சிலர் கொல்லப்பட்டனர். இது தொடர்பான வழக்கில் துமிந்த சில்வாவுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அரசியல் பழிவாங்கல் நோக்கில், விசாரணைகள் திரிவுபடுத்தப்பட்டே துமிந்த சில்வாவுக்கு இவ்வாறானதொரு தண்டனை பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது என சந்தேகிக்கும் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், இது தொடர்பில் பல கோணங்களில் கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர்.

இந்தநிலையில் துமிந்த சில்வாவுக்கு பொதுமன்னிப்பு வழங்கக் கோரி ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டு ஜனாதிபதிக்கு பிரதமர் ஊடாக மனு ஒன்றை அனுப்பியுள்ளனர். அதில் ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள தமிழ் முற்போக்கு கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களும் கையொப்பமிட்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

முன்னாள் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா கொலை குற்றச்சாட்டின் நிமித்தம் தீர்ப்பளிக்கப்பட்டு சிறையில் இருக்கின்றார். சம்பவம் நிகழும் போது அவர், மது போதையில் இருந்துள்ளார். தற்போது, அவர் சுமார் ஐந்து வருடங்களை சிறையில் கழித்துள்ளார். அவர் மீது சட்டத்தை மீறிய வேறு குற்றங்கள் இருப்பின், சட்ட ஒழுங்கு துறை அவர் மீது குற்றம்சாட்டி வழக்கு தொடரலாம்.

நான், அரசியல்வாதி என்பதை விட ஒரு மனித உரிமை போராளி. வெள்ளை வான் கடத்தல், சட்டத்துக்கு அப்பாலான கடத்தல் கொலை, கப்பம், அடாத்தான கைது ஆகியவற்றுக்கு எதிராக உயிர் அச்சுறுத்தலுக்கு மத்தியில் நான் போராடியுள்ளேன்.

துமிந்த சில்வா, ஏற்கனவே ஐந்து வருடங்கள் சிறையில் இருந்துள்ளார். அவர் அங்கே சீர்திருத்தத்துக்கு உள்ளாகியுள்ளார் என நம்புகிறேன். அவருக்கு திருந்தி, தனது சமூகத்துடன் வாழ சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என நான் எண்ணுகிறேன்.

அதேபோல், அரசியல் சார்ந்த குற்றச் செயல்களில் ஈடுபட்ட தமிழ் கைதிகளும் சிறைகளில் உள்ளார்கள். இளைஞர்களாக இருக்கும்போது கைதுசெய்யப்பட்டு, தம் வாழ்நாளில் கணிசமான காலத்தை இவர்கள் சிறையில் கழித்துள்ளார்கள். அவர்களில், தீர்ப்பு வழங்கப்பட்டவர்களும், விசாரணை கைதிகளும், வழக்குகளை எதிர்நோக்குகின்றவர்களும் உள்ளார்கள். அவர்களும் சீர்திருந்தி, புனர்வாழ்வு பெற்று, சமூகத்துக்குள் சென்று, தம் குடும்பங்களுடன், மனைவி மக்களுடன் வாழ விடுதலை வழங்கப்பட வேண்டும் எனவும் கோருகிறேன் என்று தெரிவித்துள்ளார். (எ44)

## கரவெட்டி...

யாழ்ப்பாணம், ஒக்.27
கரவெட்டி பிரதேச சபைத் தவிசாளர் ஐங்கரன், எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதியில் இருந்து பதவி விலகுகிறேன் என அறிவித்துள்ளார். இது தொடர்பான கடிதங்களை கட்சித் தலைமைக்கும், தெரிவத்தாட்சி அலுவலருக்கும் அனுப்பியுள்ளேன் என அவர் தெரிவித்துள்ளார்.

சபையில் தீர்மானம் எடுத்தல் மற்றும் சபையை கொண்டு நடத்துவதற்கு உறுப்பினர்கள் பலர் எதிர்ப்புத் தெரிவித்து வருவதால், வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்த பின்னர் தவிசாளர் பதவியில் இருந்து விலகவுள்ளேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ. சேனாதிராஜாவிடம் கேட்டபோது, பதவி விலகக் கடிதம் தொடர்பில் இன்னமும் முடிவெடுக்கவில்லை என்று தெரிவித்தார். (எ422,26)

## மரண அறிவித்தல்

அன்னை மடியில்
08 . 01 . 1948



ஆண்டவன் அடியில்
26 . 10 . 2020

### திருமதி சுபத்திராதேவி அசோக்குமார்

எழுதுமட்டுவாழ் தெற்கைப் பிறப்பிடமாகவும் மெல்பேர்ண், அவுஸ்திரேலியாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சுபத்திராதேவி அசோக்குமார் அவர்கள் நேற்று (26.10. 2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை அசோக்குமார் (முன்னாள் கட்டட ஒப்பந்தக்காரர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் - சின்னம்மா தம்பதியினரின் மூத்த புதல்வியும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சிவபாக்கியம் தம்பதியினரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற நடராசலிங்கம் மற்றும் சிவயோகலிங்கம், சித்திவிநாயகலிங்கம் (அவுஸ்திரேலியா), கெங்காதேவி, திருக்குமாரலிங்கம் (கொழும்பு), கிருஸ்ணானந்தலிங்கம், அருட்சோதிலிங்கம் (கனடா), நவமணிதேவி ஆகியோரின் பட்சமுள்ள சகோதரியும், சிகதரன் (அவுஸ்தி ரேலியா), கவிதா (அவுஸ்திரேலியா), வித்தியா (லண்டன்), கிரிஜா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுபாஷினி (அவுஸ்திரேலியா), துஸ்யந்தன் (அவுஸ்தி ரேலியா), சுகந்தன் (லண்டன்), ஸ்ரீதக்சன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆகாஷ் (லண்டன்), விதுஷா (அவுஸ்திரேலியா), கீரன் (அவுஸ்திரேலியா), சந்தோஷ் (லண்டன்), இனிகேஷ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் லோகநாயகி, பரமேஸ்வரி, ராகினி (அவுஸ்திரேலியா), தங்கராசா, ராஜகுமாரி (கொழும்பு), றஞ்ஜினிதேவி, சுமதி (கனடா), சிவானந்தம், அசோகராணி (கனடா), அசோகமலர் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் நடராசா (கனடா), சதானந்தன் (லண்டன்) ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.10.2020) செவ்வாய்க்கிழமை, இலங்கை நேரப்படி காலை 9.00 மணிக்கு Bunurong Memorial park, 790 Frankston-Dandenong Road, Dandenong South, VIC 3175 இல் நடைபெறும்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய வேண்டி அருட்பதி, எழுதுமட்டுவாழில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் அன்றைய தினம் (27.10.2020) காலை 9.00 மணியளவில் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**தகவல்:**
**குடும்பத்தினர்,**
**அருட்பதி,**
**எழுதுமட்டுவாழ்.**

**தொடர்புகள்:**
**077-8052884 (சகோதரன் - து. சிவயோகலிங்கம்)**
**021-2270447 (சகோதரி - த. கெங்காதேவி)**
**077-6030379 (சகோதரன் - து. திருக்குமாரலிங்கம்)**
**077-7464901 (சகோதரன் - து.கிருஸ்ணானந்தலிங்கம்)**
**077-2557969 (மைத்துனன் - கு. சிவானந்தம்)**

## மரண அறிவித்தல்

### செல்வி சபாரட்ணம் கௌரி



பன்னாலை தெல்லிப்பழையைச் சேர்ந்த செல்வி சபாரட்ணம் கௌரி நேற்று (26.10.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் சபாரட்ணம் மகேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், Dr. ச.கணேசன் (சித்த மருத்துவர்) ச.சபேசன் (மின் அத்தியட்சகர், யாழ் பல்கலைக் கழகம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், Dr.க.குமாரலோஜினி (பல் மருத்துவர்), திருமதி.ச.ரமணி (அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் மைத்துனியும், ச.தீபிகா, ச.சண்முகசாயி ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.10.2020) செவ்வாய்க்கிழமை அன்னாரின் பன்னாலையில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முற்பகல் 11.00 மணியளவில் கீரிமலை செம்பொன் வாய்க்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**தொடர்பு: 021 224 3238**

## மரண அறிவித்தல்



### சுந்தரம் செல்வரத்தினம்

**(சமாதானநீதவான், முன்னாள் வலி கிழக்கு பிரதேச சபை உறுப்பினர்)**

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஒட்டுமடத்தை பிறப்பிடமாகவும் விளையாட்டரங்க வீதி கல்வியங்காட்டை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் செல்வரத்தினம் நேற்று (26.10.2020) திங்கட்கிழமை இறைபத மடைந்துவிட்டார்.

அன்னார், விஜயலக்ஷ்மியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சுந்தரம் சின்னப்பிள்ளை தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி செல்லாச்சி தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற சந்துருசெல்வன் மற்றும் சந்துருசெல்வி, தயானந்தன் (ஜெயபிரியா நகைமாடம்), தயாநிதி (ஆசிரியர்- யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), அனுசியா (முகாமையாளர் கிரமியவங்கி-உரும்பிராய்), கயல்விழி (அபிவிருத்தி உத்தியோகத்தர்-மாநகரசபை யாழ்ப்பாணம்), அருணா (கனடா), சுவர்ணா (குடும்பநல உத்தியோகத்தர்-சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், வதனமதி (கனடா), புவனேந்திரராசா, ஜெயப்பிரியா, திலகேசன் (சாரதி இ.போ.ச-கோண்டாவில்), விஜயகுமார் (வியாபாரம்), சிவகுமார் (சமுர்த்தி உத்தியோகத்தர்-கோப்பாய்), எழில்தாஸ் (கனடா), தினேஸ்குமார் (தீபன்-பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான லோகேஸ்வரன், யோகநாதன், நவரத்தினம் மற்றும் கனகலிங்கம், கங்கநாதன், கங்காதேவி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான கோடீஸ்வரி, மனோண்மணி, பராசக்தி, தம்பிராசா, சுந்தரலிங்கம், கமலாம்பிகை மற்றும் அருணாச்சலம் ஆகியோரின் மைத்துனரும், சங்கமிதா, அஜந்தன், கமலேஸ், திருவேரகன், ராகுலன், ஹரிசாயினி, ஹரிஸ், ஜீவிதன் (கனடா), திருவரங்கன், லோஜனன், துவாரகன், கேதரா, பிரகஸ்வினி, மிதுர்ணயா, எழிலினி, நிலக்சன், நிலக்ஷி, அருணன் (கனடா), வருஷ்னி, வர்ணிஷா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியை நிகழ்வுகள் நேற்று பிற்பகல் 3.00 மணியளவில் மானிப்பாய் வீதி கோப்பாய் வடக்கு கோப்பாயில் அமைந்துள்ள அன்னாரின் மகளின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கோப்பாய் மத்தி.**
**076 870 4952**
**077 923 7820**

தகவல்:
**குடும்பத்தினர்**

## 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர்**

### சின்னப்பிள்ளை சுப்பிரமணியம் (J.P)

(தென்மராட்சி மேற்கு கைதடி ப.நோ.கூ.சங்கத் தலைவரும்,
யாழ். விவசாய நுகர்ச்சி கூ.ச.சமாசத் தலைவரும்)

**தோற்றம்** 10.10.1934 — **மறைவு** 22.10.2007


**திதி: 27.10.2020**

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவனாய்
வாழ்ந்து எம்மைவிட்டுப் பிரிந்து
ஆண்டுகள் பதினொன்று மறைந்ததையா
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

**கைதடி தெற்கு,**
**கைதடி.**

**பிரிவால் துயருறும்**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



**மலர்வு** 23 . 03 . 1942

**உதிர்வு** 26 . 10 . 2020

### ஐயாத்துரை இரகுநாதன்

**(A.R. நாதன்)**

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், 210, Brown Road, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட ஐயாத்துரை இரகுநாதன் (A.R.நாதன்) நேற்று (26.10.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை இந்திராணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பாக்கியவதியின் அன்புக் கணவரும், றபோனி (றஜி,கனடா), மாங்களரூபி (விஜி, லண்டன்), ஜெயசக்தி (ஜான்சி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரிவ்யா (கனடா), அபிராம் (கனடா), ஜோசுவா (கனடா), ரிஷிக்கா (லண்டன்), கவிஜன் (லண்டன்), அர்ஜுன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பேரனும், ஜெயதேவி, உமாராணி ஆகியோரின் சகோதரனும், சிவமோகன் (கனடா), ஜெகதீஸ்வரன் (லண்டன்), பிரபாகரன் (இ.மி.சபை), உருத்திரா, சிவபிரியை (கனடா), நரேந்திரம், ஸர்வேஸ்வரன், சக்திதரன் ஆகியோரின் மாமனாரும், லயா (கனடா), ரித்வின் (கனடா) ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.10.2020) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக, கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**210, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்:
**பிள்ளைகள்**

ஓம் வீராட் விஸ்வ பிரமனே நமக.

## மரண அறிவித்தல்



### திருமதி சரஸ்வதி விஸ்வலிங்கம்

இணுவில் வீதி மானிப்பாயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி விஸ்வலிங்கம் 97 வயதில் நேற்று (26.10.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற கதிரேசு தங்கம் தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற கந்தர் விஸ்வலிங்கத்தின் அன்பு மனைவியும், நிர்மலாதேவி (மேற்றன்-கிறீன் மெமொறியல் வைத்தியசாலை -மானிப்பாய்), சுசீலாதேவி, ரஞ்சிதமலர், திலகவதி ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற குணநாதன், ரட்ணசிங்கம், யோகநாதன் ஆகியோரின் அன்பு மாமியும், வாகீசன் (ஜேர்மனி), சுபாசினி, சுரேஸ்-அஜித்தா (UK), ரமேஸ், தர்மியன்-சுபத்திரா, ரூபன்-ஜர்மிலி (ஜேர்மனி) சுசீந்தரன்-சுரேஸ்சினி (ஜேர்மனி), மயூரன்-தட்சாஜினி (UK), டினேஸ், ரவிசாந்-அஜந்தினி (பிரான்ஸ்), அஜந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியும், அமுதினி, ஷிவ்றா, அனுஸ்கா, ஜஸ்விக், ஸ்வேதா, ஸ்வேஸ்ரிகன், வஸ்னி, ஒலின், அதிதி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.10.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மனிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்..

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இணுவில் வீதி,மானிப்பாய்**
**021 225 5279, 077 138 2750**

தகவல்:
**குடும்பத்தினர்**

**வலி-கிழக்கு தென்பகுதி**
**ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி.**
**கோப்பாய் கிராமிய வங்கி புனரமைப்பு செய்வதற்கான கூறுவிலைகோரல்**

மானிப்பாய் வீதி.கோப்பாயில் அமைந்துள்ள கூட்டுறவு கிராமிய வங்கி கட்டட திருத்த வேலைக்கான கூறு விலைகள் கோரப்படுகின்றன. இதற்குரிய விண்ணப் படிவத்தினை சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் **மீளளிக்கப்படாத வைப்பு பணமாக ரூபா 500.00 செலுத்தி** பெற்றுக்கொள்ளலாம். வேலை விபரத்தினை பார்வையிட்டு விண்ணப்பபடிவத்துடன் **மீளளிப்பு வைப் புப் பணமாக ரூபா 10000.00 செலுத்தி 10.11.2020 ஆம் திகதிக்கு முன் பொது முகாமையாளர் வலிகிழக்கு தென்பகுதி ப.நோ.கூ. சங்கம், நீர்வேலி** என்ற முகவரிக்கு கிடைக்ககூடியதாக அனுப்பி வைக்கவும்.

**பொது முகாமையாளர்**
**021 205 4814**

**வீடு வாடகைக்கு தேவை**

சிறிய குடும்பம் ஒன்றிற்கு மானிப்பாய் பகுதியில் வீடு வாடகைக்கு தேவை.

**077 340 0950**

**வேலையாள்கள் தேவை**

வீதி புனரமைப்பு வேலைகளுக்காக **கோப்பாய், சாவகச்சேரி** பிரதேசங்களில் வேலையாள்கள் தேவை.

**Sierra Construction Limited,**
**Project office (JF 03),**
**120,A9 Road,**
**Chavakachcheri.**

**021 227 1588**

# முசலி பிரதேச சபை
# கேள்வி அறிவித்தல்-2021

முசலி பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட மாட்டிறைச்சிக் கடைகளுக்கான 2021ஆம் ஆண்டிற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான (01.01.2021 – 31.12.2021) கேள்வி கோரப்படுகின்றது.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 28.10.2020 தொடக்கம் 11.11.2020 வரை அலுவலக நாட்களில் பிற்பகல் 03.00 மணி வரை (09.11.2020 பிற்பகல் 12.00 வரை)

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி : 11.11.2020 பிற்பகல் 12.15மணி வரை

கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 11.11.2020 பிற்பகல் 12.30 மணி

கேள்வி பிணைப்பணம் கேள்விப்பத்திரக் கட்டணம் ஆகியவைகளை முசலி பிரதேச சபை பிரதான அலுவலகத்தில் செலுத்தி கேள்வி படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி விண்ணப்பபத்திரங்கள் பூர்த்திசெய்யப்பட்டு "தவிசாளர் முசலிப் பிரதேச சபை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ' கையளிக்கலாம். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில்" "................................ இறைச்சிக் கடைக்கான கேள்வி 2021" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பபத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியாகிய 11.11.2020 பிற்பகல் 12.15 மணிக்குப் பின்னர் கிடைக்கும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

விண்ணப்பபத்திரங்கள் 11.11.2020 ஆந் திகதி பிற்பகல் 12.15 மணி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு கேள்விகள் பிற்பகல் 12.30 மணிக்கு முசலிப் பிரதேச சபை பிரதான அலுவலகத்தில் வைத்து திறக்கப்படும். இச்சந்தர்ப்பத்தில் கேள்வியாளர்கள் அல்லது அவரது அனுமதிக்கப்பட்ட கடிதத்துடன் பிரதிநிதிகள் உடன் இருக்க அனுமதிக்கப்படுவார்கள்.

சித்திகரமான கேள்விகாரர் 2021 ஆம் ஆண்டிற்கு முசலிப் பிரதேச சபை மாட்டிறைச்சிக் கடைகளில் இறைச்சி விற்பனை செய்வதற்கு கேள்வி சபையால் / அரச விலைக்கட்டுப்பாட்டு திணைக்களத்தால் தீர்மானிக்கின்ற விலைகளில் இறைச்சி விற்பனை செய்யப்படல் வேண்டும்.

முசலி பிரதேச சபையினால் கேள்விகள் ஏற்கும் நிராகரிக்கும் உரிமை தவிசாளருக்கும் கேள்வி சபைக்கும் உரியது. குத்தகை நிலுவைகளை கொண்டிருப்போர், கறுப்புப் பட்டியலில் உள்ளவர்களும் கேள்விக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

கேள்வி சம்பந்தமாக மேலதிக விபரங்களை / தகவல்களை பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | குத்தகை விபரம் | மீளளிக்கமுடியாத கேள்விப்பத்திர கட்டணம் | கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆகக் குறைந்தகேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 01 | வேப்பங்குளம் | 1000.00 | 38,000.00 | 387,805.00 |
| 02 | P.P.பொற்கேணி | 1000.00 | 19,000.00 | 194,700.00 |
| 03 | அகத்திமுறிப்பு | 1000.00 | 42,000.00 | 425,975.00 |
| 04 | பண்டாரவெளி | 1000.00 | 32,000.00 | 329,450.00 |
| 05 | அரிப்பு | 1000.00 | 42,000.00 | 425,700.00 |
| 06 | சிலாவத்துறை | 1000.00 | 60,000.00 | 605,011.00 |
| 07 | கொண்டச்சி | 1000.00 | 27,000.00 | 275,000.00 |
| 08 | மறிச்சுக்கட்டி | 1000.00 | 47,000.00 | 470,800.00 |

திரு ஏ.ஜீ.எச்.சுபிஹான்
தவிசாளர்.
பிரதேச சபை முசலி.
26.10.2020

# கொடிகாமம் தெற்கில் டெங்குக் கட்டுப்பாடு

சாவகச்சேரிசுகாதாரத்திணைக் களத்தின் ஏற்பாட்டில் கொடிகாமம். பொதுசுகாதாரப்பரிசோதகர்பிரிவுக்குட்பட்ட கொடிகாமம் தெற்குகிராமஅலுவலர்பிரிவில், இன்று டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகைகள்மேற்கொள் ளப்படவுள்ளனஎனஅறிவிக்கப் பட்டுள்ளது.

கொடிகாமம் தெற்கு பகுதியில் டெங்குவினால் ஒருவர் பீடிக்கப் பட்டுள்ளார் என அறிவிக்கப் பட்டதையடுத்து தென்மராட்சி பிரதேச செயலரின் பணிப்பின் பேரில் டெங்குப் பரிசோதனைகள் இடம்பெறவுள்ளன.

இப்பகுதியில் உள்ள குடியிருப் புகள், காணிகள், அரச மற்றும் தனியார் பாடசாலைகள், கட்டட நிர்மாணத் தளங்கள், ஆலயங்கள் , அரச தனியார் நிறுவனங்கள் உள்ளிட்ட இடங்களில் பிரதேச செயலக பட்டதாரிப் பயிலுநர்கள், பொது சுகாதாரப் பரிசோதகர், குடும்பநலசேவையாளர்கள், டெங்குக் கட்டுப் பாட்டுஉதவியாளர்கள், மற்றும் கிராம மட்ட சுகாதாரக் குழுக்களின் பிரதிநிதிகள், பொலிஸார் போன்றோர் கலந்து கொண்டு பரிசோதனைகளைமேற்கொள் ளவுள்ளனர்.

பரிசோதனை மேற்கொள்ளப் படவுள்ள இடங்களில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய நீர்ஏந்துபொருள்களில்டெங்கு குடம்பிகள் காணப்படின் குடியிருப்பாளர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. . (ப-9)

# மக்களுக்குச் சேவையாற்றவே '20'க்கு ஆதரவு வழங்கினேன்

## அரவிந்தகுமார் எம்.பி. தெரிவிப்பு



பதுளை, ஒக்.27

மக்களுக்குச் சேவையாற்றுவ தனை நோக்காகக் கொண்டே 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்தேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அ.அரவிந்தகுமார் தெரிவித் துள்ளார்.

பதுளையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது; பொதுஜன முன்னணி அரசாங்கம் எதிர்வரும் 10,15 வருடங்களுக்கு ஆட்சியில் இருக்கும் எனஎதிர்பார்க்கலாம். இவ்வாறு இருக்கும் போது எதிர்க் கட்சியில் இருந்து கொண்டு மக்கள் நலன்சார் விடயங்களை முன்னெடுக்க முடியாது. எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு வெறுமனே கொள்கை அரசியல் பேசிக்கொண்டிருக்க முடியாது. கடந்த தேர்தல் காலத்தில் பல வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கியுள்ளேன். அவ்வாறு வழங்கப்பட்டஉறுதிமொழியைக் காப்பாற்ற வேண்டிய தேவையும், அவசியமும் உள்ளது. இதனைஎதிர்க்கட்சியில்இருந்து நிறைவேற்ற முடியாது. ஆகவே மக்களுக்குச் சேவையாற்றுவ தனை முதன்மை நோக்காகக் கொண்டு இருபதுக்கு ஆதரவளித்தேன்-என்றார். (ப)

# கரவெட்டியில் இலவச உரம்

கரவெட்டி, ஒக்.27

கரவெட்டி கமநல சேவை பிரிவுக்கு உட்பட்ட 2020/2021 ஆம் ஆண்டுக்கான நெற் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு இலவச உரம் வழங்கப்பட்டு வருகின்றது. இன்று செவ்வாய்க்கிழமை துன்னாலை தெற்கு கமக் கார அமைப்புக்கு உட்பட் டவர்களுக்கும், நாளை புதன்கிழமை உடுப்பிட்டி தெற்கு கமக்கார அமைப்புக்கு உட்பட்டவர்களுக் கும், வியாழக்கிழமை கரணவாய் மேற்கு கமக்கார அமைப்புக்கு உட்பட்டவர்களுக்கும் உரம் வழங்கப்படவுள்ளது. உரம் பெற வரும் விவசாயிகள் உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி சமூக இடைவெளிகளைப் பேணி வருமாறு கரவெட்டி கமநல அபிவிருத்தி பெரும்போக உத்தியோகத்தர் கேட்டுக்கொண் டுள்ளார். (ப-422)

# வீட்டு நூலகப் போட்டி; பதிவுகள் ஆரம்பம்

சாவகச்சேரி, ஒக். 27

சாவகச்சேரி நகரசபையின் நுணாவில் பொது நூலகத்தி னர் தேசிய வாசிப்பு மாதத்தை யொட்டிநூலகஎல்லைக்குட்பட்ட மக்களுக்கான வீட்டு நூலகப் போட்டியை நடத்தவுள்ளனர். அதற்கான பதிவுகள் நூலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன்அறிவித்துள்ளார்.

போட்டியில் கலந்து கொள்பவர்கள். 100க்குக் குறையாத நூல்களை வைத்திருப்பதுடன், அவற்றை ஒழுங்குபடுத்தி அலுமாரியில்அல்லதுபுத்தகவிறாக் கையில் வைத்திருக்கவும் வேண்டும் எனவும் அறிவித் துள்ளார். (ப-9)

### குருநகரில்...

அவர்களில் ஒருவர் குருநகரையும் மற்றையவர் பருத்தித்துறையையும் சேர்ந்தவர் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

பேலியகொட மீன் சந்தையுடன் தொடர்புடைய 140பேருக்கு யாழ்ப்பாணத்தில் பி.சி.ஆர். பரிசோதனை நேற்று மேற்கொள்ளப்பட்டது. இவர்களில் இருவருக்கே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவர்கள் கடந்த 22ஆம் திகதி பேலியகொடவிலிருந்து யாழ்ப்பாணம் வந்துள்ளனர். மறுநாள் 23ஆம் திகதி தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கு கடந்த சனிக்கிழமை பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் முடிவுகள் நேற்று வெளியிடப்பட்டன. அதில் இருவருக்கும் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பருத்தித்துறையைச் சேர்ந்தவர் கடந்த 13ஆம் திகதியே அவரது குடும்பத்தினரைச் சென்று சந்தித்துள்ளார். அதன் பின்னர் அவர் குருநகரிலுள்ள தனியார் நிறுவனத்தின் விடுதியிலேயே தங்கியிருந்துள்ளார்.

குருநகரைச் சேர்ந்தவர் அவரது வீட்டுக்குச் சென்று வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இவர்கள் இருவரும் உடனடியாக கொரோனா சிகிச்சைக்கான மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர். (ஓ.5,26)

### புதிய கொத்தணியாக...

ணியின் கொரோனா பரவல் கடந்த 16ஆம் திகதி ஆரம்பமானது. குருநகரில் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட இருவரும் கடந்த 20ஆம் திகதி பேலியகொடவுக்குச் சென்றுள்ளனர். அதன் பின்னர் யாழ்ப்பாணத்துக்கு வந்து மீன் சந்தைகள் சிலவற்றுக்குச் சென்றுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

பேலியகொட மீன் சந்தையுடன் தொடர்புடைய, குருநகர் தொழிற்சாலையின் ஊழியர்கள் அனைவரும் ஒரேயிடத்திலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் இருவருடன் தங்க வைக்கப்பட்டிருந்த ஏனையோருக்கு மேற்கொள்ளப்பட்ட முதல்கட்டப் பரிசோதனைகளில் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் அவர்களுக்கு மீண்டும் பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப்படவுள்ளது. சிலவேளைகளில் இது மற்றொரு உபகொத்தணியாக மாறுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஓ.5)

### துருக்கியில்...

டித்துள்ளனர். துருக்கியில் இருந்து இலங்கைக்குவந்த உக்ரைன் விமான ஊழியர்களாலேயே வைரஸ் பரவியுள்ளது.

இது தொடர்பான புலனாய்வு அறிக்கை அரச உளவுப்பிரிவால் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோருக்கும் பாதுகாப்புச் சபையிடமும் கையளிக்கப்பட்டுள்ளன.

உக்ரைன் விமான சேவை ஊழியர்கள் 11 பேர் கடந்த செப்ரெம்பர் 11ஆம் திகதியே இலங்கைக்கு வந்துள்ளனர். சீதுவை பகுதியில் உள்ள நட்சத்திர விடுதியொன்றில் இவர்கள் சுயதனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் உக்ரைன் நாட்டைச் சேர்ந்த ஒருவருக்கு செப்ரெம்பர் 13ஆம் திகதி வைரஸ் தொற்று உறுதியானதையடுத்து அவர் ஐ.டி.எச் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இவர்கள் தங்கியிருந்த ஹொட்டலில் உள்ள 60 பணியாளர்களில் 18 பேர் நாளாந்தம் வீடுகளுக்கு சென்றுவரும் ஊழியர்களாவர். இவர்கள் செப்ரெம்பர் 11 முதல் 13ஆம் திகதிவரை வீடுகளில் இருந்தே வேலைக்கு வந்துள்ளனர்.

தனிமைப்படுத்தல் சேவையை வழங்கும் ஹொட்டல்களில் உள்ள பணியாளர்கள் 14 நாள்கள் சுய தனிமைக்கு உட்படுத்தப்படவேண்டும் என வழிகாட்டல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தாலும் அந்த நடைமுறையைமீறி 18 பேருக்கும் வீடுகளுக்கு சென்றுவருவதற்கு நிர்வாகத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வீடுகளுக்குச் சென்று வந்த 18 பேரில் ஐவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது. இவர்களில் மூவர் 11, 12 மற்றும் 13ஆம் திகதிகளில் வேலைக்கு வந்துள்ளனர். இவர்களின் உடலில் இருந்த வைரஸ் வீரியம் மிக்கது. மினுவாங்கொட ஆடைத்தொழிற்சாலையின் முதலாவது தொற்றாளர் அடையாளம் காணப்பட்டபோது அவரின் உடலிலும் இதற்கு ஒப்பான வைரஸே இருந்துள்ளது. இதன்மூலம் துருக்கியில் இருந்து வந்தவர்களே 3ஆம் அலையின் ஆரம்பப்புள்ளி என ஊகிக்கப்பட்டுள்ளது.

ஹோட்டல் ஊழியர் ஒருவர் சிலாபத்தில் இருந்து பொதுப்போக்குவரத்து ஊடாகவே தினம் வந்து சென்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-44)

### கட்டுப்படாத

பட்டுள்ளது எனக் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

மினுவாங்கொட ஆடைத்தொழிற்சாலை மற்றும் பேலியகொட மீன் சந்தைத் தொற்றாளர்களுடன் நெருங்கிய தொடர்பைப் பேணியவர்களுக்கே கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதையடுத்து நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 8 ஆயிரத்து 413ஆக உயர்வடைந்துள்ளது. அவர்களில் 4 ஆயிரத்து 464 தொற்றாளர்கள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 3 ஆயிரத்து 933 பேர் குணமடைந்து வீடு திரும்பி யுள்ளனர். 16 பேர் சிகிச்சைகளின்போது உயிரிழந்துள்ளனர். (எ-22)

### தப்பி ஓடியவருக்கும்...

னாருக்கு வந்து தப்பியோடிய நிலையில் மீண்டும் பிடிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட சோதனையிலேயே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை தனியார் பேருந்தில் மன்னாருக்கு மேற்படி நபர் வந்துள்ளார். அந்தப் பேருந்தில் பலர் பயணித்துள்ளனர். பேலியகொடவிலிருந்து வந்தவரை தனிமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவர் தப்பிச் சென்றுள்ளார். இருப்பினும் அவர் பிடிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவரது பி.சி.ஆர். பரிசோதனை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்று மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஓ.5,26)

### குற்றங்களை...

பொலிஸார் உரிய நடவடிக்கைகள் எடுப்பதில்லை. சில விடயங்களை அறிவுறுத்தியும் அவர்கள் அதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை என்று வடக்கு மாகாண ஆளுநர் திருமதி சாள்ஸ் குற்றம் சுமத்தியுள்ளார்.

கொரோனா தடுப்புச் செயலணியின் கூட்டம் நேற்று இடம்பெற்றது. இதன் போதே பொலிஸாரிடம் ஆளுநர் இந்தக் குற்றச்சாட்டுக்களை நேரடியாகச் சுமத்தினார். வடக்கில் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வு மற்றும் காட்டழிப்பு தொடர்பில் பொலிஸார் கவனம் செலுத்துவதில்லை. குறிப்பாக ஓமந்தையில் இடம்பெற்ற முக்கொலைகள் விவகாரத்திலும் சட்டவிரோத செயற்பாடுகள் சம்பந்தப்பட்டுள்ளன. இந்தச் செயற்பாடுகள் தொடர்பில் முன்னரே பொலிஸாருக்கு தெரியப்படுத்தியும் அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்று ஆளுநர் குற்றம் சுமத்தியுள்ளார். (ஓ.5)

### தனிமைப்படுத்தப்பட்ட...

தனிமைப்படுத்தல் மையங்களிலுள்ள இருவருக்கு கொரோனாத் தொற்று நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் போதைப் பழக்கத்துக்கு அடிமையானவர். இவர்கள் இருவரும் தனிமைப்படுத்தல் மையங்களிலிருந்து சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தனர். அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனைகளில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஓ.5)

### சுகாதார...

மாகாண ஆளுநர் திருமதி சாள்ஸ் கோரியுள்ளார். அத்துடன் விழாக்கள், நிகழ்வுகளை கட்டுப்படுத்துவதற்குரிய ஒழுங்குகளையும் மேற்கொள்ளுமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

வடக்கு மாகாண கொரோனா தடுப்பு செயலணியின் அவசர கூட்டம் வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் நேற்றுக் காலை இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலர், சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாவட்டச் செயலர்கள், உள்ளூராட்சி திணைக்களத்தினர், பாதுகாப்புத் தரப்பினர், பொலிஸார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இருப்பினும் வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களினதும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் அழைக்கப்படவில்லை. கொரோனா தடுப்புக்கான நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்பட்டது. மக்களிடையே சமூகஇடைவெளி பேணப்படுவதையும், மாஸ்க் அணிவதையும் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் இறுக்கமாக கண்காணிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் தற்போது ஆலயங்களில் திருவிழாக்கள் இடம்பெறுகின்றன. அவற்றையும் கண்காணிக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. மேலும் திருமணங்கள் உள்ளிட்ட நிகழ்வுகள் தொடர்பில் இறுக்கமான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு கூறப்பட்டுள்ளது. (ஓ.5)

### 20ஐ ஆதரிப்பதில்...

கள் வெளியாகியுள்ளன.

கடந்த வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில் 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு குறித்த நாடாளுமன்ற உறுப்பினர் ஆதரவாகவே வாக்களித்திருந்தார். அமைச்சர்கள் இருவர் அவருடன் சமரசப் பேச்சு நடத்தியபோது அந்த நாடாளுமன்ற உறுப்பினர் 600 மில்லியன் ரூபா கோரியிருக்கின்றார் எனக் கூறப்படுகின்றது. வாக்களித்த பின் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் உறுப்பினர்களுக்கு பரீட்சயமான கழிவறை ஒன்றுக்கு வருமாறு சமரசம் பேசிய அமைச்சர்கள் கூறியுள்ளனர். அந்த நாடாளுமன்ற உறுப்பினரும் ஆதரவாக வாக்களித்து சொன்ன இடத்துக்குப் போயுள்ளார்.

சமரசம் பேசிய அமைச்சர்கள் வரவில்லை. இன்று வரை அந்தக் கொடுப்பனவு பற்றி அந்த நாடாளுமன்ற உறுப்பினர், இரு அமைச்சர்களிடம் நினைவுபடுத்தி வருகின்றாராம் என்று தகவல் வெளியாகியுள்ளது. (எ-22)

### மருதங்கேணியில்...

வடக்கு மாகாணத்தில் கொரோனா நோயாளிகள் தங்கவைக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்படும் ஒரே ஒரு மருத்துவமனையாக மருதங்கேணி மருத்துவமனை உள்ளது. அங்கும் 50 நோயாளர்களுக்கே ஒரே தடவையில் சிகிச்சையளிக்கக் கூடிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 'மருதங்கேணி மருத்துவமனையில் நேற்றுடன் 50 நோயாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்' என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். (ஓ.5)

### கோத்தா...

தலைவர்களை அழைத்து யாழ்ப்பாண மாவட்டத்திலும், வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திலும் நேற்று கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

'கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான தேசிய நிகழ்ச்சி திட்டம், சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் குழுக் கூட்டத்துக்கான முன்னாயத்த கலந்துரையாடல்' யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்றுக் காலை 9 மணிக்கு இடம்பெற்றது. யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத் தலைவர் இ.அங்கஜனின் அறிவுறுத்லுக்கு அமைவாக, யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசனால் இந்தக் கூட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

இந்தக் கூட்டத்துக்கு யாழ்ப்பாண மாவட்டத்தின் திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

ராஜபக்ச அரசு ஒவ்வொரு திங்கட் கிழமைகளையும் பொதுமக்கள் தினமாக அறிவித்துள்ளதுடன், அன்றைய தினம் அதிகாரிகள் தமது அலுவலகங்களிலிருக்கவேண்டும் என்று அறிவுறுத்தியிருந்தது. அதனை உதாசீனம் செய்து யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்றுக் கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது.

நாளை மறுதினம் 29ஆம் திகதி கொழும்பிலிருந்து அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளனர் அதற்குரிய முன்னாயத்தமாகவே இந்தக் கலந்துரையாடல் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இருப்பினும் 29ஆம் திகதி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களின் யாழ்ப்பாணம் பயணம் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என இரண்டு தினங்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டபோதும், யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் திட்டமிட்ட கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது.

இதேவேளை, வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தால் நேற்றுக் காலை 9.30 மணிக்கு கொரோனா தடுப்புச் செயலணியின் கூட்டம் அறிவிக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாண மாவட்டச் செயலகக்கூட்டம் 9 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட பின்னர் சுகாதாரத் துறை விடயங்கள் முதலில் ஆராயப்பட்டது. அதனை முடித்துக் கொண்டு அதிகாரிகள் ஆளுநரின் கலந்துரையாடலுக்குச் சென்றனர். அந்தக் கூட்டம் முடிந்த பின்னர் சில அதிகாரிகள் மீண்டும் மாவட்டச் செயலகக் கூட்டத்தில் பங்கேற்றனர். (ஓ.5)

# கடல் உணவுகளின் ஏற்றுமதி நிறுத்தம்: வடக்கு கடற்றொழிலாளர் பாதிப்பு

**யாழ்ப்பாணம், ஒக்.27**

**மன்னார், முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணத்தில் இருந்து தினமும் 200 பாரவூர்திகளில் வெளியிடங்களுக்கு எடுத்துச்செல்லப்பட்ட கடலுணவுக ளின் ஏற்றுமதி கடந்த சில நாள்களாக நிறுத்தப்பட்டுள்ளது. இதனால், வடக்கி லுள்ள மீனவர்கள் மற்றும் விநியோகதஸ்தர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.**

கொரோனா வைரஸ் பரவலின் காரணமாக நாட்டின் பல இடங்களி லும் மீன் சந்தைகள் மூடப்பட்டதை அடுத்து மீன் விநியோகத்தில் முடக்க நிலை ஏற்பட்டுள்ளது. இதன் கார ணமாக நாளாவிய ரீதியில் ஐந்து லட்சம் கிலோ மீன்கள் விநியோகம் செய்யப்படாமல் இருப்பதாக அதிகா ரிகள் தெரிவித்துள்ளனர். வடக்கு மற்றும் கிழக்கு உட்பட மாவட்டத் தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பெரும்பாலான விநியோகதஸ்தர் கள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் கொழும்புக்கு மீன்களை அனுப்பு வதை நிறுத்தியதன் விளைவாக ஏற் றுமதிச் சந்தைகளும் பாதிக்கப்பட் டுள்ளன. மன்னார், முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணத்தில் இருந்து தினமும் 200 பாரவூர்திகளில் மீன்கள் வெளியிடங்களுக்கு எடுத் துச்செல்லப்பட்டு வந்தன. எனினும் அவை அனைத்தும் கடந்த சில நாள்களில் நிறுத்தப்பட்டுள்ளன என்று வடக்கில் உள்ள மீனவ அமைப்புகளைப் பிரதிநிதித்துவப்ப டுத்திய அன்ரன் சற்குணராஜா தெரி வித்துள்ளார். (ப)

## ரூ.326 பில்லியனை இழந்த ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்

கொழும்பு, ஒக்.27

கடனில்மூழ்கியுள்ளஇலங் கையின் தேசிய விமான நிறுவனமான ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் இந்த ஆண்டின் இதுவ ரையிலான காலப் பகு தியில் 326 பில்லியன் ரூபாவை இழந்து நஷ்ட மடைந்துள்ளது. அதே நேரத்தில் இந்த நிறுவனத் தின் தற்போதைய கடன் கள் அதன் தற்போதைய சொத்துக்களை விட 211 பில்லியன்டொலர்களைத் தாண்டியுள்ளது என்று அறிக்கை ஒன்றில் தெரி விக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டின் மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவ டைந்த ஆண்டில் விமான நிறுவனம் 326.341.48 மில்லியன்ரூபாநிகரஇழப் பைச் சந்தித்ததாக அவ் அறிக்கையில் சுட்டிக்காட் டப்பட்டுள்ளது. (ப)



வடமராட்சி, இமையாணன் கிழக்கு முதலியம்மன் ஆலய மணிக்கோபுரத்துக்கான அடிக்கல் நடும் விழா கடந்த வெள் ளிக்கிழமை நடைபெற்றது. (ப-422)

## அத்தியாவசிய பொருள்கள் விநியோகம்

கொழும்பு, ஒக்.27

கொழும்பில்ஊரடங்குச்சட் டம்அமுல்படுத்தப்பட்டபகு திகளில் அத்தியாவசியப் பொருள்களைவிநியோகிக் கும்நடவடிக்கைகள்நேற்று ஆரம்பமாகின.

அனைத்துப் பிரதேச செய லாளர்கள் மற்றும் கிராம அலுவலர்கள் ஊடாக இவை முன்னெடுக்கப்படு கின்றன என்று கொழும்பு மாவட்டச்செயலாளர்பிரதீக் யசரத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தெரி வித்ததாவது;


சுகாதாரப் பிரிவினரின் ஆலோசனைக்கமைய , சுகாதார வழிகாட்டல்க ளின் கீழ் பொருள்கள் விநி யோகிக்கப்படுகின்றன. நடமாடும் வாகனங்கள் ஊடாக இந்தப்பொருள்கள் மக்களுக்கு விநியோகிக் கப்படுகின்றன. இதுதவிர, தனிமைப்படுத்தப்பட்டவர் களில், வறிய குடும்பங்கள் இருப்பின் அவர்களுக்கு சலுகை வழங்குவதற்கும் நடவடிக்கைஎடுக்கப்பட்டுள் ளது- என்றார். (ப)

## பாடசாலைக்கு பஸ் அன்பளிப்பு

கிளிநொச்சி, தருமபுரம் அரசினர் தமிழ்க் கல வன் பாடசாலைக்கு ஜனாதிபதி செயலகத் தால், பஸ் ஒன்று அன்ப ளிப்புச் செய்யப்பட்டுள் ளது.இலங்கையில்,ஐந்து பாடசாலைகளுக்கு கடந்த 23ஆம் திகதி யன்றுஜனாதிபதிசெயல கத்தால் 5 பஸ்கள் அன் பளிப்புச்செய்யப்பட்டன. அதில்வடக்கில்தருமபுரம் பாடசாலைக்கு ஒரு பஸ் கிடைத்துள்ளது.

பஸ்ஸுடன் மாணவர் கள் கல்வி கற்பதற்கான கணினி, இணையதள வசதிகள்,12லட்சம்ரூபா பெறுமதியான புத்தகங் கள் மற்றும் கலைப் பொருள்களும் வழங் கப்பட்டுள்ளன.

இப்பொருள்கள் கிடைக் கப்பெற்றமையால்,வறு மைப்பிரதேசமானதரு மபுரம் பாடசாலை மாணவர்கள், மிகவும் பயன் அடைவர் என்று பாடசாலை அதிபர் தெரி வித்துள்ளார். (ஐ-113)



கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்ற மானம்பு உற்சவத்தின் போது விநாயகப் பெருமாள் எழுந்தருளி கன்னி வாழைவெட்டும் நிகழ்வும் இடம்பெற்றது. (ப-17)

## யாழ். மாநகர பகுதியில் கால்வாய்கள் துப்புரவு

யாழ்ப்பாணம், ஒக்.27

யாழ். நகரில் பிரதான கழிவு நீர் ஓடும் கால் வாய்கள் துப்புரவு செய்யும் பணிகளை யாழ் மாநகராட்சி மன் றம் ஆரம்பித்துள்ளது.

யாழ். கஸ்தூரியார் வீதி யில் புல்லுக்குளத்தில் இருந்து நிலத்திற்கு கீழ் செல்லும் கழிவு நீர் ஓடும் வடிகால்கள் கடந்த சில வருடங்களாகத் துப்புரவு செய்யப்படாததால் கூடு தலான கழிவுகள், மற் றும், இதர கழிவுகள் அதிகளவில் தேங்கிக் காணப்படுகின்றன. இத னால், இந்தக் கழிவு களை தொழிலாளர்கள் சிரமப்பட்டு அகற்றி வரு கின்றனர் என்று தெரி விக்கப்படுகிறது. (ப-17)

## சர்வாதிகார நிலையே '20' இன் உருவாக்கம்

### வினோ எம்.பி தெரிவிப்பு

வவுனியா, ஒக்.27



எங்கள் விருப்பத்திற்கு மாறாக அரசியல் நிலைப்பாடுகளை அர சாங்கம் மேற்கொண்டு வருகின்றது. 20 ஆவது திருத்தச் சட்டம் என்று ஒரு சர்வதிகார நிலையை உருவாக்க அரசமைப்பில் மாற்றம் கொண்டுவரப்பட்டுள் ளது. இவ்வாறு நாடா ளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங் கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்த தாவது;

சாதாரண மக்களின் விருப்பத்திற்கு மாறாகக் கொண்டுவரப்படுகின்ற சட்டங்களின் ஊடாக மக்களின் எண்ணங்கள் நிராகரிக்கப்பட்டு மூன் றில் இரண்டு பெரும் பான்மை இருக்கின்றது என்ற மமதையில் அர சாங்கம் மிகவும் சமயோ சிதமாகச் செயற்படுகி றது. மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற்காக தமிழ் முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளை இலாப கமாகத் தங்கள் பக்கம் திருப்பி அந்த மக்கள் மத்தியில், கட்சிகளுக் கிடையில் பிரிவினை களை, வேறுபாடுகளை உருவாக்கி தங்களின் அரசியல் நலன் சார்ந்து இயங்கிக்கொண்டிருக் கின்ற நிலைமை காணப் படுகின்றது. இந்த நிலைமை தொடர்ந்தும் இருக்குமாக இருந்தால் சாதாரண மக்கள் அர சாங்கத்தின் ஊடாகப் பெறுகின்ற எந்த வாய்ப் புக்களையும் மக்களின் தேவைகளை அரச கட்சி கள் சார்ந்த பிரதிநிதிகள் ஊடாக நாங்கள் பெற முடியாத நிலைமை வரும். நாங்கள் தொடர்ந்தும் எங்கள் அரசியல் உரி மைக்காகப் போராடு கின்ற அதேவேளை யில் எங்களின் அடிப் படைத்தேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கத்திற்கு எதிரா கத் தொடர்ச்சியாக மக் கள் பலத்தைக் காட்டிப் போராடவேண்டிய நிலை வரும் -என்றார். (ப-19)

## 11 பேருக்கு நாவாந்துறையில் பி.சி.ஆர். சோதனை

### எவருக்கும் தொற்றில்லை

நாவாந்துறை பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை 11 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட் டது. இந்தப் பரிசோதனையில் இவர் களுக்கு கொரோனாத் தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டது. நாவாந்துறை பிரதேச கடலுணவு உற்பத்தித் தொழிற்சாலைகளில் இருந்து பேலியகொட மீன் சந் தைக்குச் சென்று வந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இவர்க ளுக்கு பரிசோதனை மேற்கொள்ள ப்பட்டது. வடக்கில் இருந்து தெற் குக்கு கடலுணவுகளை எடுத்துச் செல்வோர் கொரோனாத் தொற் றுள்ள பிரதேசங்களுக்குச் சென்று வந்தால் அவர்கள் தனிமைப்படுத் தப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள் ளனர். (ஐ-17)

# கிறிஸ் கெய்ல், மந்தீப் சிங் அதிரடி; கொல்கத்தாவை வீழ்த்தியது பஞ்சாப்



கே.எல். ராகுல் ஏமாற்ற கிறிஸ் கெய்ல், மந்தீப் சிங் அதிரடியாக விளையாட கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை 8 இலக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தியது கிங்ஸ் லெவன் பஞ்சாப்.

ஐ.பி.எல். தொடரின் 46ஆவது லீக் ஆட்டம் ஷார்ஜாவில் நேற்று நடைபெற்றது. அதில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிகள் மோதின.

முதலில் விளையாடிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி ஷுப்மான் கில் (57), மோர்கன் (40) ஆகியோரைத் தவிர ஏனைய துடுப்பாட்ட வீரர்கள் நிதிஷ் ராணா (0), ராகுல் திரிபாதி (7), தினேஷ் கார்த்திக் (0), சுனில் நரைன் (6) சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க 20 பந்துப் பரிமாற்றத்தில் 9 இலக்குகளை இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றது.

அதன்பின் 150 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் கே.எல். ராகுல், மந்தீப் சிங் ஆகியோர் ஆரம்ப வீரர்களாகக் களம் இறங்கினர். இருவராலும் தொடக்கத்தில் அதிரடியாக விளையாட முடியாத நிலை ஏற்பட்டது.

கே.எல். ராகுல் 25 பந்துகளில் 28 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். அப்போது பஞ்சாப் அணி 8 பந்துப்பரிமாற்றத்தில் 47 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அதன்பின் மந்தீப் சிங் உடன் கிறிஸ் கெய்ல் இணைந்தார். இந்த இணை அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

பஞ்சாப் அணி 13.4 பந்துப்பரிமாற்றத்தில் 100 ஓட்டங்களைத் தொட்டது. மந்தீப் சிங் 49 பந்தில் அரைசதம் அடிக்க, கிறிஸ் கெய்ல் 25 பந்தில் 2 பவுண்டரிகள், 5 சிக்சர்களுடன் அரைசதம் அடித்தார்.

பஞ்சாப் அணி 147 ஓட்டங்கள் எடுத்திருக்கும்போது கிறிஸ் கெய்ல் 29 பந்துகளில் 51 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து நிக்கோலஸ் பூரன் களம் இறங்கினார். பஞ்சாப் அணி 18.5 பந்துப்பரிமாற்றத்துக்கு 2 இலக்குகள் இழப்புக்கு 150 ஓட்டங்கள் எடுத்து 8 இலக்குகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. மந்தீப் சிங் 56 பந்தில் 8 பவுண்டரிகள், 2 சிக்சர்களுடன் 66 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். (எ)

# ஐ.பி.எல்லில் கோலி புதிய சாதனை



புதுடில்லி, ஒக்.27

ஐ.பி.எல் தொடரில் அரைச்சதம் அடித்து றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணியின் தலைவர் விராட் கோலி புதிய சாதனை படைத்துள்ளார்.

குறைந்த நான்கு ஓட்டங்கள் அடித்து அரைச்சதம் அடித்துள்ளார். இது விராட் கோலி சாதனைகளில் புது ரகம். இது ஐ.பி.எல்லில் வேறு எந்த துடுப்பாட்ட வீரனும் செய்யாத சாதனையாகும். சி.எஸ்.கே அணிக்கு எதிரான போட்டியில் அவர் இந்தச் சாதனையை செய்துள்ளார்.

சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு எதிராக றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி மோதிய 44 ஆவது லீக் போட்டி டுபாயில் நடைபெற்றது. முதலில் பெங்களூர் அணி துடுப்பெடுத்தாடியது.

பெங்களூர் அணி ஆட்டத்தின் ஆரம்பம் முதல் நிதானமாக ஆடி வந்தது. மற்றைய துடுப்பாட்ட வீரர்கள் பெரிய அளவில் ஒத்துழைக்காத நிலையில் விராட் கோலி, டி வில்லியர்ஸ் சேர்ந்து ஓட்டம் எடுத்தனர். டி வில்லியர்ஸ் 39 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

கோலி அரைச்சதம் அடித்தார். 43 பந்துகளில் சரியாக 50 ஓட்டங்கள் எடுத்து கோலி ஆட்டமிழந்தார். அவர் தன் 50 ஓட்டங்களில் ஒரு நான்கு ஓட்டம், ஒரு ஆறு ஓட்டம் மட்டுமே அடித்து இருந்தார். மீதமுள்ள 40 ஓட்டங்களை ஓடியே எடுத்தார். இது ஐ.பி.எல் தொடரில் புதிய சாதனை ஆகும்.

அதிக அரைச்சதம் அடித்த வீரர்கள் பட்டியலில் ஷிகர் தவான் சாதனையை சமன் செய்தார் விராட் கோலி. இந்தப் போட்டியில் கோலி அரைச்சதம் அடித்து பல சாதனைகளைச் செய்த போதும், சி.எஸ்.கே அணி 8 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (ற)

# அரையிறுதிக்குள் போபண்ணா ஜோடி

புதுடில்லி, ஒக்.27

ஐரோப்பிய பகிரங்க ரென்னிஸ் இரட்டையர் பிரிவு அரையிறுதிக்கு இந்தியாவின் போபண்ணா, நெதர்லாந்தின் மிட்டெல்கூப் ஜோடி முன்னேறி யது. ஐரோப்பிய பகிரங்க ரென்னிஸ் தொடர் பெல்ஜியத்தில் நடைபெற்று வருகின்றது. இதன் இரட்டையர் பிரிவு காலிறுதியில் இந்தியாவின் ரோகன் போபண்ணா, நெதர்லாந்தின் மேட்வே மிட்டெல்கூப் ஜோடி, ஆஸ்திரேலியாவின் அலெக்ஸ் டி மினார், மாட் ரெய்ட் ஜோடியை எதிர்கொண்டது. முதல் செற்றை 6;3 என்ற கணக்கில் கைப்பற்றிய போபண்ணா ஜோடி, 2 ஆவது செற்றை 4;6 என்ற கணக்கில் இழந்தது. வெற்றியாளரை நிர்ணயிக்கும் சூப்பர் டை பிரேக்கரில் எழுச்சி கண்ட இந்தியா, நெதர்லாந்து ஜோடி 10;4 என்ற கணக்கில் வென்றது. முடிவில் போபண்ணா ஜோடி 6;3, 4;6, 10;4 என்ற கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குள் நுழைந்தது. (ற-இ)



# பிளாஸ்ரர் சம்பியன்




பொம்மேர்ஸ் விளையாட்டுக் கழகம் தனது அங்கத்துவ வீரர்களுக்கிடையே முதன்முறையாக நடத்திய பொம்மேர்ஸ் பிறீமியர் லீக் சுற்றுப் போட்டியில் பொம்மேர்ஸ் பிளாஸ்ரர் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ற-இ)

லொக்டவுன் வந்தால் என்ன செய்வீர்கள்?
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
அமெரிக்க லொத்தர் இலவச விசா
விண்ணப்ப முடிவு திகதி 05-11-2020
2022ல் நீங்களும் அமெரிக்காவில்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற அரிய சந்தர்ப்பம்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இந்த வருடம் எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம் A/L
V2 Travels
0768226241

**காணி விற்பனைக்கு உண்டு**
யாழ்ப்பாணம் ராச வீதியில் மெயின் றோட்டுடன் 3 பரப்பு சீர்செய்யப்பட்ட காணி விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.
பிரித்து கொடுக்கப்படும் 1 ½ பரப்பாக.
தொடர்பு : குரு
077 805 1655
077 468 3354, 076 640 0974

**வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை**
வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
வழமைபோன்று நடைபெறுகின்றன.
திருமுருகன் கொம்நெற் (Pvt) Ltd
321, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
0777554528, 0212227835

**காணி விற்பனைக்கு உண்டு**
யாழ்ப்பாணம் வசாவிளான் குட்டிபுரம் அபிராமி அம்மன் கோயிலுக்கு முன் வீதியில் 6 பரப்புக் காணி விற்பனைக் குண்டு. பிரித்து கொடுக்கப்படும். 2 பரப்பாக ஒரு பரப்பின் விலை மூன்று லட்சம் ரூபா (300,000 ரூபா) தரகர் தேவை யில்லை தொடர்பு- குரு
076 888 4625
0769986806, 0740754204

**வேலைவாய்ப்பு**
நெல்லியடி நகரில் இயங்கிவரும் எமது கிளை நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடத்திற்கு விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.
எழுதுவினைஞர் (இரவுநேரம்)
தகுதியானவர்கள் கீழ்காணும் முகவரிக்கு அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு தங்களது சுயவிவரக் கோவையை அனுப்பி வைக்கவும்.
info@uthayan.com



உதயன் பணிமனை
இல.361, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.

**வகுப்புக்கள்**
A/L Accounting classess மற்றும் O/L Commerce classess (English & தமிழ் Medium) வீடுகளில் மற்றும் தனியாக, குழுவாகவும் கற்பிக்கப்படும்.
T.P: 077 995 4182

**பெண் வேலை ஆட்கள் தேவை**
கோழிப்பண்ணையிலும் கோழி இறைச்சிக்கடையிலும் வேலை செய்வதற்கு பெண்கள் தேவை.
தொடர்பு: 077 2718 149
Viber : 041 779243687



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.10.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.